for Young
friends of fmpb

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

இளைஞர் மாத இதழ்



# தரிசனத்தைக் கூர்மைப்படுத்த வா!

Vol 31-Issue 10 - October - 2025

Private circulation only

# முக்காடு (திரை)

## THE VEIL

Rev. Selvinraj G Charles

கிறிஸ்துவுக்குள் பிரியமான கேரீத் இளம் நண்பர்களுக்கு, இயேசுவின் இன்ப நாமத்தில் அன்பின் வாழ்த்துகள் !

இந்த பத்தாவது மாதத்தில் **Veil** (முக்காடு) என்ற தலைப்பில் ஆசரிப்பு கூடாரத்தின் மேன்மையைக் கண்டு நாம் ஆண்டவரை துதிக்கப் போகின்றோம், வாருங்கள் !

ஆண்டவர் இஸ்ரவேல் ஜனத்திற்குக் கொடுத்த ஆசரிப்பு கூடாரத்தில் நான்கு முழு திரைகள் உள்ளது.

### I. கிறிஸ்துவின் நீதியைக் காட்டுகிறது (Shows the righteousness of Christ):

திரித்த மெல்லிய பஞ்சுநூல், இளநீல நூல், இரத்தாம்பர நூல், சிகப்பு நூலாலான ஒரு மூடுதிரை வாசஸ்தலத்தின் உட்பகுதியில் போடப்பட்டிருக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்தின் உட்புறத்தில் இருக்கிற இந்த முக்காடு அல்லது மூடுதிரை நமக்கு கற்றுக் கொடுக்கிற செய்தி, இது கிறிஸ்துவினால் உண்டான நீதியின் அழகைக் காட்டுகிறது **(Shows the beauty of Justice)**. நாமும் அவர் முன் நீதியுடன் வந்து ஆண்டவரை ஆராதிக்க அழைக்கப்படுகின்றோம்.

### II. நம் பாவத்தைச் சுமந்து பாளயத்துக்குப் புறம்பே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி (The lamb of God stain outside the Camp):

இரண்டாவது மூடுதிரை (அதற்கு மேலாக) ஆட்டு மயிராலான ஒரு முழு திரை போடப்பட்டிருந்தது. இந்த ஆட்டுமயிரால் போடப்பட்ட முக்காடு நமக்குக் காட்டுகின்ற உண்மை என்னவென்றால், இது கிறிஸ்துவானவர் உலகத்தின் பாவங்களைத் தன் மேல் ஏற்றுக்கொண்டு நமக்காக நகர வாசலுக்கு வெளியே சிலுவையில் பலியாக இரத்தம் சிந்தி நம்மை அவரண்டை ஏற்றுக்கொண்டதன் அடையாளமாக இருக்கிறது. இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை என வேதாகமம் நமக்கு கற்றுக்கொடுக்கிறது. அதற்காக ஆண்டவரும் பாளயத்திற்குப் புறம்பே அடிக்கப்பட்டார். நம் பாவம் அனைத்தும் இயேசுவின் இரத்தத்தால் மன்னிக்கப்பட்டுவிட்டது. ஆகையால் இயேசுவை விடுதலையுடன் நம்மைத் தாழ்த்தி ஆராதிப்போம்.

### III. நமக்காக கிறிஸ்து இரத்தம் சிந்தி மரித்தார் (Christ sheld his blood for us):

மூன்றாம் திரை சிவப்பு தீர்ந்த ஆட்டுக்கடாத் தோலினாலானது. இந்தத் திரை ஆட்டுக்கடாவின் இரத்தத்தால் தீர்ந்த தோலினால் மூடப்பட்டிருக்கும். இது நம் பாவத்துக்கு நாம் தான் இரத்தம் சிந்த வேண்டும். ஆனால் நம்மேல் அன்புகூர்ந்த ஆண்டவர் நமக்காகத் தன் பரிசுத்த இரத்தத்தைச் சிந்தி மரித்தார். இதன் அடையாளமாக இந்த மூன்றாவது திரை நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

### IV. கிறிஸ்துவின் நிந்தையை நமக்கு அறிவிக்கிறது (Announcing to us the reproach of Christ):

ஆசரிப்புக் கூடாரத்தின் மேற்புறத்தில் இந்த மூடுதிரை தகசுத் தோலினால் மூடப்பட்டிருக்கும். நமக்காக பாடுகளை ஏற்ற ஆண்டவருக்கு பார்க்கத்தக்க ரூபமில்லை. ஒரு வெளிப்புறமான அழகு இல்லாததையே காட்டுகிறது. வாசஸ்தலத்தின் உட்புறத்தில் மாத்திரமே அந்த பூரண அழகுள்ள மூடுதிரையைக் காண முடியும். அதைப்போலவே ஒரு உண்மை கிறிஸ்தவனின் அழகு உள்ளான மகிமையே அல்லாமல் வெளிப்பிரகாரமான தோற்றத்தில் அல்ல. இந்த தகசு தோலானது "கிறிஸ்துவின் நிந்தையை" நமக்குக் கூறுகிறது. வெளிப்பிரகாரமாக உண்மையான சபையானது தவறாக புரிந்து கொள்ளப்பட்டும், கனவீனப்படுத்தப்பட்டும், நிந்தைக்குள்ளாக்கப்பட்டும் தான் இருக்கும். ஆனால் உலகத்திலோ காரியங்கள் முற்றிலும் எதிர்ப்பதமாக வெளியே அழகுள்ளதாகவும், உள்ளேயோ அசுத்தத்தால் நிறைந்ததாகவுமே இருக்கும்.

இயேசு இந்த உலகத்திற்கு வந்தபோது அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது (ஏசாயா 53:2). இந்த உலகம் அவரை அற்பமாக எண்ணி புறக்கணித்தது. தேவபக்தியை வாஞ்சித்தவர்கள் மாத்திரமே அவரிடத்தில் வந்தார்கள். அதைப்போலவே சபையும், நீயும் இருக்க வேண்டும். வெளி உலகத்தில் காணப்படுகிற எந்த ஒரு கவர்ச்சியினிமித்தமும் ஜனங்கள் சபையில் இழுக்கப்படாமல், சபையின் ஜீவியத்தினாலும், ஐக்கியத்தின் அடிப்படையினாலும் மாத்திரமே அவர்கள் சபைக்கு வர வேண்டும்.

இயேசுவுக்கு சொந்தமானவர்கள் அவரோடு கூட நிந்தையைச் சுமந்து பாளயத்திற்குப் புறம்பே (உலகத்தில்) போவார்கள். ஆனால் திரைக்குள்ளாகவோ தேவனோடு ஐக்கியம் பெற்றிருப்பார்கள் (எபி. 10:19, 20; 13:13). ஆனால் இன்று அநேகர் பாளயத்துக்கு உள்ளேயும், திரைக்கு வெளியேயும் ஜீவிக்கிறவர்களாகவே இருக்கிறார்கள். பாளயத்திற்குப் புறம்பே என்பது "உலகத்தால் புறக்கணிக்கப்பட்ட வாழ்க்கையேயாகும்".

*என் அன்பு வாலிப நண்பனே! நாம் இயேசுவைப் போல் திரைக்குள் நின்று ஆண்டவரை மகிமைப்படுத்த வேண்டும். இதுதான் கிறிஸ்தவ வாழ்வின் வெற்றியாகும். ஆமென்!*

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

**VISION**

To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இள்ளஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing


www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266



**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**


ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX


| | |
|---|---|
| இளசுகள் நாலும், இலை சாப்பாடும் | - 5 & 7 |
| சிலர் ஏன் தங்கள் பாவங்களுக்காக பாவ உணர்வை உணரவில்லை? | - 8 |
| நாகரிகத்தின் தொட்டில் - ஈராக் | - 10 |
| சிக்கிள் செல் நோய் | - 12 |
| ஆன்லைன் சூதாட்ட செயலிகள் | - 14 |
| உணர்ச்சி நுண்ணறிவு | - 18 |
| கனம் பெற்ற ஸ்திரீ - வாசற்படியில் | - 19 |
| யேசபேலின் ஆவி Vs ரூத்தின் ஆவி | - 20 |


# தரிசனத்தைக் கூர்மைப்படுத்த வா!

என் அன்பு இளம் உள்ளங்களுக்கு, சர்வ வல்லவராம் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்!

**அகிரிப்பா ராஜாவே, நான்**
**அந்தப் பரமதரிசனத்துக்குக்**
**கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை.**
**(அப்போஸ்தலர் 26:19)**

பவுல் கிறிஸ்துவை, எப்பொழுது தன் வாழ்வில் கண்டு தரிசித்தானோ, அன்று முதல் அவன் கிறிஸ்துவை பற்றியதான புரிந்து கொள்ளுதலையும், அவன் மூலமாக ஆண்டவரால் நிறைவேற்றப்பட வேண்டிய தரிசனத்தையும் தெளிவாக புரிந்துக்கொண்டான். ஆண்டவரைக் காண்பதற்கும், அவருடைய தரிசனத்தைப் பெறுவதற்கும் அவருக்காகக் காத்திருக்க வேண்டியது அவசியம். ஆண்டவர் கொடுக்கின்ற தரிசனம் நம் வாழ்க்கையை மாற்ற வல்லமையுள்ளது.

யாக்கோபு ஆண்டவருடைய தரிசனத்தைப் பெற்ற பின், இஸ்ரவேலாக மாறினான். மோசே கர்த்தரைத் தரிசித்த பின், தன்னுடைய ஜனம் விடுதலையடைய வேண்டும் என்கிற தரிசனத்தை உடையவனாக மாற்றப்பட்டான். கோழையான கிதியோன் ஆண்டவருடைய தரிசனத்தைப் பெற்ற பின் மாவெரும் வீரனாக மாறினான்.

தேவனாகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய சீஷர்களைப் பார்த்து **"அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்"** (லூக்கா 10:2) என்று சொன்னார். ஆனால் சீஷர்களினால் அதை உணர முடியவில்லை. தரிசனத்துடன் இருக்கும் மக்களால் மட்டுமே அறுவடைக்கு ஆயத்தமாக விளைச்சல் உள்ளது என்பதின் அர்த்தத்தையும், அவசியத்தையும் உணர்ந்துகொள்ள முடியும். நம்முடைய கண்களை நாம் உயர்த்தி பார்க்கும்போது தான், பவுல் பார்த்ததைவிட அதிகமாக பார்க்க முடியும். இந்தியர்களை இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது நம்முடைய இயக்கத்தின் தரிசனம். இந்த தரிசனம் நிறைவேற உன்னை அர்ப்பணித்து, உனது தரிசனத்தைக் கூர்மைபடுத்த வா என அழைக்கிறோம்.

அக்டோபர் மாதத்தில் நடைபெறவுள்ள வாலிபர் கூடுகைகள், முகாம்கள், பயிற்சி கூடுகைகள் மற்றும் பணித்தள விஜயங்களைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தர ஜெபியுங்கள். நமது பணித்தளத்தில் நாம் சந்திக்கின்ற உபத்திரவங்களினால் மிஷனெரிகள் மற்றும் விசுவாசிகள் சோர்ந்து போகாமல், கர்த்தருடைய பெலன் அவர்களைத் தாங்க, தேசத்தில் ஆண்டவருடைய இராஜ்யம் தடையில்லாமல் கட்டப்பட நமது ஜெபங்களில் நினைவு கூறுவோம்.

தேவ கிருபை எப்பொழுதும் உங்களோடிருப்பதாக!

கிறிஸ்துவின் பணியில்,
ஜெ. டேனியல் அருள்மணி

# கப்பல் ஊழியம் - நோவா

Rev. Johnson Daniel

TORAH MISSION

1st WEEK MESSAGE

உலகின் 2வது மிகப்பெரிய அமெரிக்காவின் போர்க்கப்பல் அசாதாரணமான வானிலையின் நடுவே, கடலின் கொந்தளிப்பின் மத்தியில் தன் இலக்கை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அக்கப்பலை வழிமறித்து ஏதோ ஒன்று கெம்பீரமாக அசையாமல் நின்றுக் கொண்டிருந்தது. நிலைமையை அறிந்த கப்பலின் மாலுமி, “மோதலை தவிர்க்க 15 டிகிரி தெற்காக உன் பாதையை மாற்று, ஏனெனில் நாங்கள் உலகின் மிகப்பெரிய வல்லரசான அமெரிக்காவின் ஆயுதம் தாங்கிய, எதையும் தகர்க்க வல்ல உலகின் மிகப்பெரிய போர்க்கப்பல்” என்று எச்சரித்தான். எதிர்முனையிலிருந்து மிகச் சாதாரணமாக பதில் வந்தது, முடியாது நீங்கள் வேண்டுமானால் உங்கள் பாதையை மாற்றிக் கொள்ளுங்கள் என்று. கோபத்தின் உச்சத்திற்குச் சென்ற மாலுமி, “நீங்கள் பாதையை மாற்றிக்கொள்ள உங்களுக்கு கட்டளையிடுகிறேன், இல்லையேல் நீங்கள் தாக்கப்படுவது நிச்சயம்” என கர்ஜித்தான். மெதுவான, ஆனால் உறுதியான பதில் வந்தது, “நாங்கள் எங்கள் பாதையை மாற்றிக் கொள்ள முடியாது. கப்பல் மோதலைத் தவிர்க்க, நீங்கள் பாதையை மாற்றிக் கொண்டால் உங்களுக்கு நல்லது. ஏனெனில், இது ஸ்பெயின் தேசத்தின் கடற்பரப்பில், கன்மலையின் மேல் உள்ள கலங்கரை விளக்கம் (*Light House*). பெரும்பாலான நேரங்களில் மனுகுலமும், ஆண்டவரோடு மோதல் போக்கு கொண்ட மனநிலையையே கொண்டிருக்கிறது. இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு நோவாவின் காலமாகும்.

விழுந்துபோன மனுகுலத்தின் விடுதலைக்காக தன்னை விரும்பிக் கொடுத்த ஆண்டவரின் வாக்குத்தத்திற்கு விரோதமாக (ஆதி. 3:15) மனுகுலத்தின் அக்கிரமம் பெருகினது என வேதாகமம் சொல்லுகிறது (ஆதி. 6:5). முதல் இரத்த சாட்சியான ஆபேலுக்குப் பதிலாக ஆண்டவர் அளித்த மகன் சேத்தின் வம்சத்தில் தோன்றினவர்கள். தேவனைத் தொழுதுக்கொள்ளும் சந்ததியாகவும் (ஆதி. 4:26). பிற்காலத்தில் தேவ புத்திரர் என்ற பட்டத்தையும் பெற்றவர்களானார்கள். காயீனின் சந்ததியினரோ இதற்கு முற்றிலும் எதிரான வாழ்க்கை முறையினைக் கொண்டவர்களாய், தேவனோடு எவ்வித தொடர்பில்லாதவர்களாய் வாழ்ந்தனர். பாவத்தின் அகோரத்தினால் தேவபுத்திரரும் சோரம் போனார்கள் என்பதே வேதம் கூறும் சாட்சி. விளைவு மிகப்பெரிய அழிவு. ஆனாலும் தேவ வாக்குத்தத்தம் எவ்வாறு நிறைவேறினது என்பதனை நோவாவின் வாழ்க்கையில் நாம் காணமுடியும்.

### I. கிருபை பெற்ற நோவா:

நோவா என்ற பெயருக்கு “தேற்றுபவன்” என்று பொருள். நோவா தேவனுக்குப் பயந்து, தேவனோடுள்ள ஐக்கியத்தில் தேறினவனாயிருந்தான். அதனால் தேவனுடைய கண்களில் அவனுக்கு கிருபை கிடைத்து, தேவத்திட்டம் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது. தேவனுடைய கிருபையைப் பெற்று, அவருக்கு உகந்த வாழ்க்கை வாழ நாம் சிந்தையுள்ளவர்களாய் இருக்கிறோமா? அல்லது சக மனிதர்களைப் போல தேவனுக்கு எதிரிடையான சிந்தையோடு, சுயத்தை சார்ந்து, சுய இலக்கை அடைய முற்படுகிறோமா? 2 பேதுரு 2:5இன் படி நோவாவைக் குறித்து, “நீதியை பிரசங்கித்தவனாகிய நோவா” என காண்கிறோம். இதனால் நோவா தன் சமகாலத்தவருக்கு நிகழப்போகும் பேரழிவைக் குறித்து எச்சரித்து, தேவனுக்குள் அவர்களைத் தேற்றினான் என நாம் புரிந்துக் கொள்ள முடிகிறது. நாமும் நம் தலைமுறையினரை எச்சரித்து, கர்த்தருக்குள் அவர்களை வழிநடத்த முற்படுவோம்.

### II. கீழ்ப்படிந்த நோவா:

தேவனுடைய கண்களில் கிருபைப்பெற்ற நோவா, தேவத்திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பையும் பெறுகிறான். இதன் மூலம் வேதாகமம் சொல்லும் செய்தி, “ஆசீர்வாதத்தோடு பொறுப்பும் உண்டு” என்பதே. பேழையை உண்டு பண்ண தேவன் நோவாவுக்கு கட்டளையிடுகிறார். தனது 480வது வயதில் இப்பொறுப்பினை ஏற்றவர், சுமார் 120 ஆண்டுகளில் அதனை செய்து முடித்தார். தேவ கட்டளையை நிறைவேற்றுவதின் மூலம், தேவ எச்சரிப்பையும், தேவனிடம் திரும்பி அழிவினின்று தங்களைக் காத்துக்கொள்ள வேண்டியதின் அவசியத்தையும், நற்செய்தியாக அறிவிக்கும் சுவிசேஷனாக நோவா செயல்பட்டான் (எபி. 11:7). மேலும் வரும் ஆக்கினையினின்று நீதிமான்களைத் தப்புவிக்க தேவன் வல்லவர் என்பதனையும் நமக்கு விளக்குகிறான். நோவாவின் காலத்திற்கு ஒத்த காலத்தில் வாழும் நாமும் தேவகட்டளைக்குக் கீழ்படிவதன் மூலம், தேவநீதி வெளிப்படும்போது அவரால் காக்கப்படுவோம் என்பதனைப் பறைசாற்றுவோம்.

### III. கீர்த்தி பெற்ற நோவா:

நோவா தேவனுக்கு கீழ்ப்படிந்ததினால் அழிவிலிருந்து காக்கப்பட்டான். ஏனெனில், தேவனே அவனையும், அவன் குடும்பத்தையும் பேழையினுள் விட்டு கதவடைந்தார் என வாசிக்கிறோம். தேவ எச்சரிப்புக்கு செவிகொடுக்காதவர்கள் அழிந்து போனார்கள் என்றும் நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். இது ஒரு கற்பனை கதையல்ல, இது ஒரு சரித்திர உண்மையாகும். தேவனைச் சார்ந்திருப்போர் என்றுமே கைவிடப்படுவதில்லை. பெருவெள்ளத்தின் அழிவிற்குப் பின் தேவன், நோவாவோடு தன் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார். மேலும் ஆதி. 9:27இல் வாக்குப்பண்ணப்பட்ட வித்தானவர் சேமுடைய கூடாரங்களில் வாசம் பண்ணுவார் என்கிற உறுதியையும் பெறுகிறார். அதன் மூலம் தேவதிட்டத்தின் அங்கமாக நோவா அங்கீகாரம் பெறுகிறான். நாமும் நம்முடைய வாழ்வில் தேவனுடைய உடன்படிக்கைக்கு உட்படுவோம். அதனால் அவரின் உண்மை சீடர்களாக உலகறிய செயல்படுவோம்.



# இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

(நாலு இளைஞர்களின் பெயர்கள்: Dr. சத்தியன்,
Er. சாதுரியன், Pr. விஷயம் , Rev. ரகசியம்)

(நால்வரும் சென்னை - திருச்சி ஹைவே ரோட்டில், சென்னைக்கு மிக அருகில் மதுராந்தகத்திலுள்ள கேவ் ரெஸ்டாரென்ட்டுக்கு (Cave Restaurant) வந்து சேர்ந்தனர்)

சத்தியன்: டேய் இங்க தான் ரெண்டாயிரம் ஏக்கரில் குளோபல் ஹை டெக் சிட்டி வருது போல.

விஷயம்: ஆமாடா. இதை தன்னிறைவு மையம்ன்னு (Self-sustained city) சொல்லுறாங்க. இதுல IT hub, வணிகம், Fintech நிதிதொழில் நுட்பம், வீடுகள் மற்றும் அனைத்து உள்கட்டமைப்புகளோடு கூட.....

சத்தியன்: ஓ சூப்பர் டா. மொத்தத்துல இது ஒரு மாடர்ன் கேவ்-வாக (Modern Cave) இருக்கும்னு சொல்லு.

விஷயம்: சரியா சொன்ன, இதை அறிஞ்ச ஒரு ஞானவான்தான் முதலாவது கேவ் ரெஸ்டாரென்ட்டை ஆரம்பித்தான்.

சாதுரியன்: இன்னைக்கு Gen-Zகளுக்கு சிட்டிக்குள்ளே இருக்குற எல்லா மாலும் கேவ் தானே; உள்ள போனா யாரையும் கண்டே பிடிக்க முடியாது.

ரகசியம்: இவங்கள எழுப்புதலுக்கு கொண்டுவர என்னடா செய்யணும்?

விஷயம்: ஒரே வழி வெப் கனெக்ஷனை நிறுத்தணும்.

சாதுரியன்: டேய் எழுப்புதலுக்கு வழி கேட்டா, அழிவுக்கு வழி சொல்ற (எல்லாரும் சிரிப்பு).

ரகசியம்: சரி, இங்க என்ன ஸ்பெஷல்.

சாதுரியன்: பெயரை பார்த்தாலே தெரியலயா, இங்க என்ன பிரமாதமாக இருக்குன்னு

விஷயம்: சரி Waiterயை கூப்பிடு --- (waiter வருகிறான்.)

Waiter: இங்க நல்லி குழம்பு, நெஞ்சு எலும்பு சூப், எலும்பு ரசம் எல்லாம் ஸ்பெஷல்

சாதுரியன்: ஓகே. மெயின் டிஷ் சாப்பிடறதுக்கு என்ன இருக்கு?

Waiter: ரொட்டி, நாண், ரைஸ் இருக்கு. இங்க ஸ்டீம் ரைஸ் நல்லா இருக்கும் சார்.

விஷயம்: ஒகே நாலு ஸ்டீம் ரைஸ் + மேலே நீ சொன்ன எல்லாத்தையும் கொண்டு வா.

சத்தியன்: இப்ப மாமி ஜி.எஸ்.டி கொறச்சாங்களே. அதுல Non வெஜ் ஐட்டம் குறைஞ்சுதா.

ரகசியம்: Non வெஜ் மற்றும் ரைஸ் குறையல. ரொட்டி, நாண் மட்டும் தான் குறைச்சிருக்காங்க.

(waiter சிரித்துக்கொண்டே போய் விட்டான்.)

சாதுரியன்: டேய் எலும்பை குறித்து என்ன நினைக்கிற?

விஷயம்: அதுவா? உயிரற்றது





சாதுரியன்: எப்படிடா?

விஷயம்: ஆதாம் எலும்பிலிருந்து தானே ஏவாள் வந்தாள். எசேக்கியா தரிசன பள்ளத்தாக்குல எல்லா எலும்பும் உயிர்பெற்றது. அதேபோல இதில ஏதோ இருக்கிறது. அதனால்தான் யோசேப்பு எலும்புகளைக் குறித்து கட்டளையிட்டான்னு பைபிள் சொல்லுது (ஆதி. 50:25, யாத். 13:19, எபி. 11:22).

ரகசியம்: நான் நினைக்கிறேன். அது உயிரற்றது. ஆனால் உயிர்த்தெழும் போது உயிரோடு எழும்பும்னு.

சத்தியன்: நீ எப்பவுமே சரியா கொழப்புவ.

சாதுரியன்: சரி அப்டின்னா? சங்கீதத்துல பாடுகள், துக்கத்தை குறிக்க (22:14), பாவம் அதன் விளைவைக் குறிக்க (32:3), அவருடைய மகன் சாலொமோன், சந்தோஷத்தைக் குறிக்க (நீதி 3:8) எலும்பைப் பயன்படுத்துறாரு. ஏன் கடவுள் கூட நீதிமானைக் காப்பாற்றும் விஷயத்துல (34:20) எலும்பைப் பயன்படுத்துறாரு.

சத்தியன்: சரி, சரி.... இத இப்போ சாப்பிடுவோம். இந்த எலும்புல உயிர் இருக்கா, இல்லையான்னு அலசி ஆராயாத]

விஷயம்: அப்படின்னா? இயேசுவின் சிலுவைப் பாடுகளை யோவான் எழுதும் போது எலும்பு முறிக்கபடல (யோவான் 19:36). அது தீர்க்கதரிசன நிறைவேறுதல் (சங். 34:20) என்கிறார். அதேபோல பஸ்கா ஆட்டுக்குட்டியின் எலும்புகளும் முறிக்கப்படக்கூடாது (யாத். 12:46 / எண். 9:10) என்று ஆகமங்களில் எழுதியிருக்கு. மற்ற பழைய ஏற்பாட்டின் புத்தகங்களில் பார்த்தால் (நியா. 9:2 / 2 சாமு. 19:12 / 1 நாளா. 11:1) எலும்பும், சதையும் என்கிற இந்த இரண்டு வார்த்தைகள்தான் தொடர்ச்சியாக வருகிறது. எப்பொழுதுமே எபிரேய ஏடுகளில் இரத்தமும், சதையும் அப்படின்னு வராது. ஆனா புதிய ஏற்பாட்டுல ரெண்டு இடத்துல (எபி. 2:4 / 1 கொரி. 15:50) இருக்கு. எபிரேய மொழியில எப்போதுமே வராது. Paul கூட எபேசியர் 5:30இல் எலும்பும், சதையும் என்று தான் குறிப்பிடுகிறார்.

சத்தியன்: இரத்தமும், சதையும் வார்த்தை ஒரு நாடக மொழி அல்லது நாவல் மொழிடா....

விஷயம்: நம்மளும் கூட ஞாயிற்றுக்கிழமை காலையிலேயே கறிக்கடைல போய் ரத்தக்கறின்னா கேட்கிறோம். எலும்புக்கறி வேணும்னு தானே கேக்குறோம். ஆனா நாம இத யோசிக்கணும்........

-இதன் தொடர்ச்சி 7ஆம் பக்கம்

FELLOWSHIP LUNCH

Mr. Isaac Kamalesh

# வெளிநாட்டு ஊழியம் - ஆமோஸ்

Rev. Daniel Gnanapragasam

OT MISSION

2nd WEEK MESSAGE

*Outreach ministry* என்பது நடைமுறை வழிகளில் மற்றவர்களுக்கு உதவவும், சேவை செய்யும் விருப்பத்துடனும், விசுவாசத்துடனும் கூடிய புறப்படுதலேயாகும்.

**Outreach ministry is not just about improving our earthly lives. But ultimately it is saving our eternal lives.**

**"நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்"** *(மாற்கு 16:15)* என்பது கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவிப்பதற்காக இயேசு கிறிஸ்து நமக்குக் கொடுத்த பிரதான கட்டளையாகும். *(Tell everyone everywhere the Gospel)*

கடந்த இதழிலே சொந்த ஜனங்களுக்கான ஊழியத்தை நிறைவேற்றிய மொர்தெகாயைக் குறித்து சிந்தித்தோம். இங்கே யூதாவிலிருந்து புறப்பட்டு, இஸ்ரவேலுக்குச் சென்று வெளிநாட்டு ஊழியத்தை நிறைவேற்றிய ஆமோசைக் குறித்து சிந்திக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

**ஆமோஸ்:**

- எருசலேமுக்கு தெற்கே *12 mile* தொலைவிலுள்ள தெக்கோவா கிராமத்தைச் சேர்ந்தவர்.
- மந்தை மேய்க்கிறவரும், காட்டத்திப் பழங்களைப் பொறுக்குகிறவருமாயிருந்தவர் (ஆமோஸ் *7:14*).
- ஓசியா, மீகா, ஏசாயா தீர்க்கதரிசிகளுக்கு சமகாலத்தவர் (8ஆம் நூற்றாண்டு).
- தெற்கே யூதாவில் உசியாவும், வடக்கே இஸ்ரவேலில் எரொபெயாம் *II* ஆட்சி செய்த காலத்தில் ஊழியத்தைச் செய்தவர் (ஆமோஸ் *1:1*)

மந்தையின் பின்னாலே சென்றுகொண்டிருந்த ஆமோசை கர்த்தர் அழைத்து **"என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு"** *(7:15)* என்றார். "கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்" *(3:7)*. ஆம் ஆமோசுக்கு கடவுள் கொடுத்த தீர்க்கதரிசனம் இஸ்ரவேல் தேசத்திற்கு எச்சரிப்பாகக் கொடுக்கப்பட்டது. "கர்மேலின் கொடுமுடியும் காய்ந்துபோம்" என்று சீயோனிலிருந்து கெர்ச்சிக்கிற கர்த்தரால் உரைக்கப்பட்டது *(1:2)*. எலியா தீர்க்கதரிசி சுமார் *80* ஆண்டுகளுக்கு முன்பு கர்த்தருக்காக வைராக்கியம் பாராட்டிய இந்த கர்மேல் பர்வதத்திற்கு *(1 இரா. 18:19)* ஏன் இந்த நியாயத்தீர்ப்பு? இப்புத்தகத்தில்

*i.* 8 நாடுகளுக்கு எதிரான கடவுளின் நியாயத்தீர்ப்பு *(1:3-2:16)*
*ii.* நியாயத்தீர்ப்பைக் குறித்த *3* பிரசங்கங்கள் *(3:1-6:14)*
*iii.* நியாயத்தீர்ப்பைக் குறித்த *5* தரிசனங்கள் *(7:1-9:10)*
*iv.* மீட்பைப் பற்றிய *5* வாக்குத்தத்தங்கள் *(9:11-15)* விவரிக்கப்பட்டுள்ளது.

தமஸ்கு, காத்சா, தீரு, ஏதோம், அம்மோன், மோவாப், யூதாவைத் தொடர்ந்து இஸ்ரவேலுக்கு கடவுளின் நியாயத்தீர்ப்பு சொல்லப்பட்டது. அவர்களுடைய மூன்று பாதகங்களினிமித்தமும், நான்கு பாதகங்களினிமித்தமும் (மூன்று பாதகங்கள் என்றால் முழுமை, நான்கு பாதகங்கள் என்றால் நிரம்பி வழிதல்) நான் அவர்கள் ஆக்கினையைத் திருப்பமாட்டேன் என்ற கர்த்தரின் வார்த்தை அவர்களுடைய பாவங்களின் மிகுதியைக் குறிப்பிடுகிறது.

தொடர்ந்து வரும் *3* பிரசங்கங்களில் இஸ்ரவேலுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் இஸ்ரவேலின் பாவங்களையும், அநீதிகளையும் எடுத்துக் காண்பித்து மனந்திரும்புதலுக்கு அழைப்பு கொடுக்கிறது. *3* தடவை இந்த வசனத்தைக் கேளுங்கள் *(3:1, 4:1, 5:1)* என்று ஆரம்பித்து சொல்லப்பட்ட இஸ்ரவேலின் பாவங்கள்

### I. பாசாங்கு ஆராதனை (Religious Hypocrisy):


பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் இஸ்ரவேல் மக்களை மாத்திரம் அறிந்துக் கொண்ட கர்த்தர் *(3:2)* உண்மை ஆராதனையை எதிர்பார்க்கிறார். அது முழு இருதயத்தோடு கர்த்தரை ஆராதிக்க அழைக்கிறது. இஸ்ரவேலரோ பெத்தேலிலும் (பொன் கன்றுக்குட்டி), கில்காலிலும் (பாகால்) சென்று வழிபட்டனர் *(4:4, 5)*. *7* கேள்விகள் மூலமாக *(3:3-6)* கடவுளின் சித்தத்திற்கு ஒன்றிணையாத இஸ்ரவேலரின் பாவங்களைச் சுட்டிக்காட்டி மனந்திரும்ப அழைக்கிறார்.

### II. ஆடம்பர வாழ்வு (Nation's Wealthy):

கர்மேல் என்றால் பசுமையான தோட்டம் மற்றும் பெயருக்கேற்ற செழிப்பு. எரோபெயாம் *II* காலத்தில் இராணுவ வெற்றிகளையும் *(2 இரா. 14:25-27)*, பொருளாதார செழிப்பையும் (ஆமோஸ் *3:15, 6:46*) இஸ்ரவேல் பெற்றிருந்தது. செழிப்பு என்பது கடவுளின் குணத்தை தேவைப்படுவோருக்கு வெளிப்படுத்தக் கொடுக்கப்படும் வாய்ப்பு. மாறாக இஸ்ரவேலரோ கொடுமையையும், கொள்ளையையும் குவித்துக்கொண்டு ஆடம்பர வாழ்வு வாழ்ந்தார்கள் *(6:4-6)*. அப்பத்தாழ்ச்சி, மழைத்தாழ்ச்சி, பயிர் அழிவு, கொள்ளை நோய், இடைவிடாத சிட்சை போன்ற எச்சரிப்புகள் கிடைக்கப்பெற்றது. ஆகிலும் அவர்கள் தேவனிடத்தில் திரும்பாமற்போனார்கள் *(4:6-11)*.

### III. நீதியை மறுத்தல் (Denial of Justice)

கடவுளின் மக்களின் செழிப்பு, கடவுளின் நன்மையை பலனளிக்கும் சேவை மூலம் இரக்கத்தை வெளிப்படுத்தி கடவுளை மகிமைப்படுத்துவதாகும். ஆனால் இவர்கள் இரக்கத்தைக் காண்பிக்க மறுத்து, தரித்திரரை மிதித்து, நீதிமானை ஒடுக்கி, பரிதானம் வாங்கி, ஒலிமுக வாசலில் நியாயத்தைப் புரட்டினார்கள் *(5:11, 12)*. **"நியாயத்தை எட்டியாக மாற்றி, நீதியைத் தரையிலே விழப்பண்ணுகிறவர்களே அவரைத் தேடுங்கள்"** *(5:7)* என்ற மனந்திரும்புதலின் அழைப்பை மறுத்தார்கள். இப்படிப்பட்ட பாவ வாழ்க்கைமுறையைக் கொண்டிருந்த இஸ்ரவேல் மக்களுக்கான கடவுளின் நியாயத்தீர்ப்பு செய்தியை *5* தரிசனங்கள் மூலம் விளக்குகிறார். முதலிரண்டு (வெட்டுக் கிளி, அக்கினி) தரிசனங்களுக்கு மனஸ்தாபப்பட்டு அப்படி ஆவதில்லை *(7:3, 6)* என்று சொன்ன கர்த்தர், தூக்குநூலை காண்பித்து "இனி



அவர்களை மன்னிக்க மாட்டேன்" (7:8) என்று சொன்னபோது, ஆமோசுக்கு எதிர்ப்புகள் தொடங்குகிறது (7:10-17). ஆனாலும் அதனைத் தொடர்ந்து இஸ்ரவேலுக்கு முடிவுகாலம் வந்தது (8:2) என்பதை பழுத்த பழங்களுள்ள ஒரு கூடை தரிசனத்தின் மூலமாகவும், தவிர்க்க முடியாத அழிவை, நன்மைக்கல்ல தீமைக்கென்று வைக்கப்படும் கர்த்தருடைய கண்களை (9:4) பலிபீடத்தின் மேல் நிற்கும் ஆண்டவரின் தரிசனத்தின் மூலமாகவும் தைரியமாக அறிவித்தார்.

**"சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன"** (ஏசாயா 52:7). அழகான பாதங்கள் கடந்து செல்லும் நற்செய்தி பாதையோ கரடுமுரடானது. *Preaching God's word is not a bed of roses, neither is it full of thorns.* ஆமோசின் பாதங்களும் இந்த கடினப்பாதையை ஏற்றுக்கொண்டது.

### I. ஏற்றுக்கொள்ள விருப்பம் (Willing to Accept):

தனிப்பட்ட விருப்பமாக இல்லாமல் கடவுளின் கட்டளையால் கிடைக்கப்பெற்ற ஊழியத்தை (*Divine Call*) மந்தையின் பின்னாலே சென்று கொண்டிருந்த எளிமையான ஆமோஸ் ஏற்றுக் கொண்டார். தன் வாழ்விடமான யூதாவை விட்டு இஸ்ரவேல் சென்றார் (72 *mile away*) தன் மேய்ப்புத் தொழிலை விட்டு தீர்க்கதரிசியானார்.

### II. மாற்றத்தை ஏற்படுத்த விழிப்பு (Waking up to Change):

தேவ அன்பையும், சகோதர அன்பையும் காண்பிக்கத் தவறியதால் ஏற்பட்ட சமூக அநீதி, நேர்மையற்ற தன்மை, கடவுளின் சட்டத்தைப் புறக்கணித்தல் போன்ற பாவங்களைச் சகோதர அன்போடு புறப்பட்டுச் சென்று சுட்டி காண்பித்தார். "நீ யூதா தேசத்திற்கு ஓடிப்போ" என்ற பெத்தேலின் ஆசாரியன் அமத்சியாவின் எதிர்ப்புகளைப் பொறுத்துக் கொண்டார்.

### III. மீட்க வேலை செய்தல் (Working to Restore):

கடவுள் நியாயத்தீர்ப்பு செய்தியைப் பக்குவமாக (புறஜாதிகளிடத்திலிருந்து தொடங்கி), யதார்த்தமாக (மேய்ப்பனுக்குரிய அடையாளத்தோடு), பெயருக்கேற்ற பாரத்தோடு (மனந்திரும்ப அழைப்புக் கொடுத்து) மீட்பைக் குறித்த நம்பிக்கையோடு (9:11-15) ஊழியத்தை நிறைவேற்றுகிறார்.

பிரியமானவர்களே! '*Outreach Ministry*' என்பது சவால்கள் நிறைந்ததே. "இயேசு என்றால் என்ன விலை, என்றே கேட்டிடும் எத்தனை பேர்?" இன்றும் நம் பாரத தேசத்தின் நிலை இதுதான். *India need outreach ministry*

- *To Provide God's Provision*
- *To Spread the Gospel*
- *To build the Divine relationship*

" அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்" (ரோமர் 10:14, 15) ஆமென்!

5ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

**ரகசியம்:** நம்ம ஏன்டா ஆதாம் சொன்னது மாதிரி "நீ என் எலும்பின் எலும்புன்னு" சொல்லாம "என் இதயமேன்னு" சொல்றோம். நம்மளும் எலும்பின் எலும்பேன்னு சொன்னா எப்படி இருக்கும்... (சிரிப்பு).

**சத்தியன்:** சரி, நீ என்ன சொன்ன?

**ரகசியம்:** நான் ஏதோ சொன்னேன். இப்ப அந்த கதையை ஏன் கேக்குற

**சத்தியன்:** சும்மா சொல்லேன்...

**ரகசியம்:** அதுவா? அப்போ எங்க மாமா எனக்கு வாங்கிக் கொடுத்த பேனா அதை ரொம்ப ரொம்ப நேசிச்சேன். அவகிட்டப் போயி நீ என் பேனா மாதிரின்னு சொல்லிட்டேன். (எல்லாரும் சிரிப்பு )

**சாதுரியன்:** சரி அத விடு, அது அறியா வயசு. இதுக்கு என்ன தான் அர்த்தம். சுருக்கமா யாராவது சொன்னா நல்லா இருக்குமே.

**விஷயம்:** சரி நான் சொல்லுறேன்... (அவசரப்படாத முதல்ல நல்லிய முடிக்கிறேன்) (உள்ள உள்ளது வரமாட்டேங்குதுடா)

**சத்தியன்:** நம்ம போராட்டம் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் அல்ல ----- இப்போ நல்லி எலும்போடு....

**விஷயம்:** ம்ம்ம் சூப்பர்... இப்போ நாம எலும்புக்கு போவோம், அதாவது கிரேக்க மொழில "எட்செம்" இதன் பொருள் 'சாரம்' "essence". adjectiveல அட்ஸம் (atzum) - என்பது 'வலுவானது' (Strong or Great), 'மூடப்பட்டது - Closed'. ஆபிரகாமை பலத்த ஜாதியாக்குவேன் (ஆதி.18:17). இந்த"எட்செம்" வார்த்தைதான் கடவுள் பயன்படுத்திருக்கிறார் பாரேன்.

**சாதுரியன்:** இந்த எட்செம் Gematria value -206, இது மனித உடலில் உள்ள மொத்த எலும்புகளின் எண்ணிக்கை. கடவுள் ஆதாமின் எலும்பிலிருந்து ஏவாளை உருவாக்கினார். பின்னர் ஆதாம் ஏவாளை "என் எலும்பின் எலும்பு" என்கிறார். இதன் பொருள் மனிதர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர், ஒரே சாரத்தால் இணைக்கப்பட்டுள்ளனர். தேவனின் சுவாசத்தின் மூலம் ஒரே ஆவி அவர்களுக்குள் இருக்கிறதுன்னு அர்த்தம்.

**விஷயம்:** Main அர்த்தத்தை சொல்லி முடிக்கலாம் - வேதாகமத்தின் அடிப்படையில் இதை "Permanence - நிரந்தரத்தன்மை" மேலும் எலும்புகள் உள் வாழ்க்கை (Inner life), அடையாளம் (Identify) மற்றும் சகிப்புத்தன்மையைக் குறிக்கின்றன. எலும்புகள் முறியாமல் இருப்பது என்பதின் அர்த்தம் வாழ்க்கையின் தொடர்ச்சி மற்றும் கடவுளின் உடன்படிக்கை வாக்குறுதி (The continuity of life and God's covenant promise). ஒட்டுமொத்தமா சொன்னா Bones as symbol of Identity & Permanence

**சத்தியன்:** Ok... Superda

**ரகசியம்:** சரி வாங்க புறப்படுவோம்...

(நால்வரும் புறப்பட்டு செல்கின்றனர்)

Mrs. Jeba Saral

# சிலர் ஏன் தங்கள் பாவங்களுக்காக பாவ உணர்வை உணரவில்லை?



ஹலோ பரலோகவாசிகளே ! எல்லாரும் நல்லா இருக்கீங்களா? என்ன இந்த அக்கா பரலோக வாசிங்கன்னு சொல்றாங்கன்னு யோசிக்காதீங்க ! ! இப்போ வாழ்ந்துகிட்டு இருக்கீங்களே இந்த வாழ்க்கை எதுக்காக? பரலோகத்துக்கு போகுறதுக்கு தானே? சரி ஏன் எல்லாரும் பரலோகத்துக்கு போக முடியல? ஏன்னா அவர்களுக்கு எது பாவம், தேவனுக்கு பிரியம் இல்லாதவைகள் என்று தெரிந்தும் செய்கிறது தான் ! ! இந்த மாதம் அத பத்தி தான் நம்ம பாக்க போறோம். முதலாவதாக தேவனை அறிந்தும், அவருடைய சத்தியத்தை பொய்யாக மாற்றி; தங்கள் இருதயத்தில் இருளடைந்தவர்களாய் இருக்கிறவர்கள், பாவத்துக்காக குற்றவுணர்ச்சி அடைய மாட்டார்கள் [ரோமர் 1:21, 25].

சமீபத்தில், அமெரிக்கா நாட்டை சேர்ந்த தேவ மனிதரான சார்லி கிர்க், **Utah** யுனிவர்சிட்டியில், கல்லூரி மாணவர்களிடையே உரையாடிக் கொண்டிருக்கும்போது, சுட்டுக் கொல்லப்பட்டார். ஏன், அவர் **transperson, gay, LGBTQ** ஆகியோருக்கு எதிராக பேசியதால் ! ! ! அமெரிக்காவில் இந்த மேற்கண்ட பிரிவு மக்கள், இயேசுவை அறியாதவர்கள் அல்ல ! அவர்கள் சிறு வயதிலிருந்து இயேசுவை விசுவாசித்து வளர்ந்தவர்கள் ! ! பரிசுத்த வேதாகமம் கூறுகிறது: **ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம் (எபிரெயர் 6:4-6).**

ஆம் நண்பர்களே ! தேவனுடைய அன்பையும் அறிவையும் பெற்ற அவர்களை, மறுபடியும் ஆண்டவரிடம் சேர்ப்பது கடினமான காரியம் தான் ! ! ! இரண்டாவதாக ஒருவர் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் இல்லை என்றால் அவர்கள் தாங்கள் செய்யும் தவறை உணர மாட்டார்கள் [யோவான் 16:7, 8]. எடுத்துக்காட்டாக ஒரு பெண் தன்னுடைய சக ஆண் நண்பரிடம் ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக வாட்ஸ் அப்பில் உரையாடுகிறார். அது குட் மார்னிங், குட் நைட் ஆக இருந்தது, பின் நாட்களில் பல்வேறு பேச்சுக்களாக மாறி, மணி கணக்கில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்; ஒரு கட்டத்தை எட்டியவுடன் அவர்கள் காதல் வயப்படுகின்றனர். இதில் அந்தப் பெண், தான் செய்வது தவறு என்பதை உணராமல், அந்தப் பாவத்தை மேலும் மேலும் செய்து கொண்டிருக்கிறார் ! ! இதில் என்ன தவறு இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம் ! தன் அம்மா, “ஏன் இவ்வளவு நேரம் மொபைலில் அமர்ந்திருக்கிறாய்? என்று கேட்டால் எரிந்து விழுகிறாள். நம்முடைய பைபிளில், தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது [எபே. 6:1]. நண்பர்களை அல்ல ! ! ! கொஞ்சம் யோசி ! ! யாரோ ஒரு நபர், நம்மிடம் ஏன் இத்தனை மணி நேரம் பேச வேண்டும்? நமக்கு அவரிடம் அத்தனை மணி நேரம் பேசுவதற்கான வேலையும் இல்லை; ஆனால் ஏன் அந்த நபர் நம்மிடம் இவ்வளவு நேரம் பட்சமாய் ஆசையாய் பேசுகிறார்? இதை உணராமல் பேசி, பாவத்தில் விழுந்து படைத்தவரை மறந்து வேதம் வாசித்தல், ஜெபித்தல் ஆகியவைகளை தவிர்த்து, நட்புக்கு முதலிடம் கொடுக்கிறாய், இது தவறு தானே ! ! எந்த ஒரு விஷயம் உன்னை உன் தேவனிடத்திலிருந்து பிரிக்கிறதோ அது தவறு தான். என் நண்பனே ! இதை நீ கட்டாயம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நீ பாவத்திலிருந்தால் பாவத்துக்கு அடிமை, நீ தேவனின் பக்கமிருந்தால் தேவனுக்கு அடிமை. பாவத்தின் சம்பளம் மரணம். நீ தேவனுடைய கிருபைக்கு உட்பட்டிருந்தால், அந்த அடிமைத்தனம் உனக்கு நித்திய ஜீவனைக் கொடுத்து உன்னை பரலோகவாசியாய் மாற்றும். தேவனிடத்தில் உள்ள அடிமைத்தனத்தில் உனக்கு குற்ற உணர்வு இல்லாமல், தைரியமாய் தேவனுடைய கிருபாசனைத்தண்டையில் சேர்ந்து, அப்பா பிதாவே என்று கூப்பிடும் சுதந்திரத்தை நீ பெற்றுக் கொள்கிறாய்.

மூன்றாவதாக சிலர் பாவங்களைப் பற்றியதான குற்ற உணர்ச்சியைப் பெறாமல் அவர்களைத் தடுப்பது அவர்களுடைய சொந்த குடும்பமாக அமைகிறது. ஒரு தகப்பனோ, தாயோ பொய் சொல்லும் பழக்கத்தை வைத்திருந்தாலோ, சினிமா நாடகங்கள் பார்க்கிறவராக இருந்தாலோ, அது நாளடைவில் பிள்ளைகள் மனதில் பாவமற்றதாகவும், தப்பித்துக் கொள்ளும் ஒரு போக்காகவும் அமைந்து விடுகிறது. இதனால் அவர்கள் பொய் சொல்லும் பொழுது அது அவர்களுக்கு தவறாக தெரிவதில்லை ! என் பெற்றோரே இந்த பாவத்தை தாராளமாக செய்யும்பொழுது நான் மட்டும் அதற்கு விதி விலக்கல்ல. அவர்கள் நன்றாக தானே இருக்கிறார்கள்; நானும் அப்படி தான் இருப்பேன் என்னும் போக்கு பலரிடையே காணப்படுகிறது. ஆமாக்கா ! நல்லா சொல்லுங்க. இப்பதான் என் பாயிண்ட பிடிச்சிருக்கீங்க என்று நீங்கள் சொல்லுகிறீர்களா? சரி உன் தகப்பனும், தாயும் தானா உன்னை பரலோகத்துக்கு கூட்டிக்கொண்டு போகப் போகிறார்கள். உன்னுடைய பரலோக வாசம் உன் கையில். அதனால அவங்களை சாக்குபோக்காக தேவனிடம் நீ கூற முடியாது ! ! இதை மறந்து விடாதே. உன் மனசாட்சியை நீ விற்றுவிட்டு, தவறை தவறல்ல என்று சொல்லிக் கொண்டு; உன் மாம்ச இச்சைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறாயா? இன்று உன் வாழ்வை நோக்கி பார். இந்த உலகத்தில், நீ சந்தோஷமாக இருந்து விடலாம். ஆனால் நிச்சயமாக பரலோகம் உனக்கு இல்லை ! !

**எனவே நண்பனே, பரிசுத்த ஆவியானவரை நீ பெற்றுக் கொண்டு; அவரை வருத்தப்படுத்தும் காரியங்களைச் செய்யாமல், தவறைத் தவறு என்று ஒத்துக்கொண்டு, அதை விட்டு ஓடு!! இதை படிக்கும் உங்களை என்னால் ஒருவேளை இவ்வுலகில் சந்திக்க முடியவில்லை என்றாலும், பரலோகத்தில் ஒரு நாள் சந்திப்போம்!!! தேவன் அவ்வித கிருபையை நமக்குத் தருவாராக. ஆமென்.**

# மேற்கு வங்காளம்

இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது மேற்கு வங்காள மாநிலம். மக்கள் தொகையின் அடிப்படையில் நான்காவது மிகப் பெரிய மாநிலம் இது. வேளாண்மைத் தொழில் இம்மாநிலப் பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரமாகும்.

1857ஆம் ஆண்டு நிறுவப்பட்ட கல்கத்தா பல்கலைக்கழகம் மிகப் பிரபலமான கல்வி நிறுவனமாகும். விருந்தோம்பல் இம்மக்களின் முக்கியமான கலாச்சார நடைமுறை. பருத்தியிலிருந்து கையால் நெய்யப்பட்ட டானுப் புடவைகள் பெண்களின் பாரம்பரிய உடையாகும்.

இம்மாநிலம் ஏராளமான பண்டிகைகளை உற்சாகத்துடன் கொண்டாடுகிறது. இம்மாநிலத்தில் பெரும்பான்மையான மக்கள் (70%) இந்து மதத்தைப் பின்பற்றுகின்றனர். 27% இஸ்லாமிய சிறுபான்மையினர், கிறிஸ்தவர்கள், ஜைனர்கள், பௌத்தர்கள் மற்றும் சீக்கியர்களும் வாழ்வதினால் மதரீதியாக பன்முகத்தன்மை கொண்ட மாநிலமாக விளங்குகின்றது.

தற்கால ஊழியத்தின் தந்தை (The Father of Modern Missions) என்று போற்றப்படும் வில்லியம் கேரி அவர்கள் 1761ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்து 1793ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் தேதி குடும்பத்துடன் கல்கத்தா வந்து இறங்கினார். பெங்காலி மொழியைக் கற்றுக்கொண்டு ஊழியம் செய்தார். பெங்காலி, பஞ்சாபி, ஒரியா, அசாமி, மராத்தி, ஹிந்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வேதாகமத்தை மொழி பெயர்த்தார். மார்ஸ்மேன், வில்லியம் வார்ட் ஆகியோருடன் இணைந்து 1818இல் செராம்பூர் கல்லூரியை நிறுவினார்.

அல்பேனியா நாட்டில் பிறந்த அன்னை தெரசா தனது 18ஆம் வயதில் 1928ஆம் ஆண்டு கொல்கத்தா வந்து ஏழை எளிய மக்களுக்கு மத்தியில் ஊழியம் செய்தார்.

## நமது ஊழியம்:

1992ஆம் ஆண்டு பீஹார் மாநிலத்திலுள்ள போரியோ பணித்தளத்தில் நடந்த நமது விசுவாசியின் திருமணத்திற்கு மேற்கு வங்காளத்திலுள்ள அவர்களது உறவினர்களில் சில மால்டோ மக்கள் வந்திருந்தனர். வந்திருந்த முதியவர்கள் நமது ஊழியர் Rev. M. ஜாண் அவர்களிடம் மேற்கு வங்காளத்தில் மால்டோ மக்கள் அதிகம் இருக்கின்றனர். எங்கள் பகுதிக்கு வந்து இந்த இயேசுவைப் பற்றி அறிவியுங்கள் என அழைப்பு விடுத்தனர். அதே ஆண்டில் மேற்கு வங்காளத்தில் உள்ள சிலிகுரி, மால்டா மக்களுக்கு நமது ஊழியர்களான திரு. ஜாண்,
திரு. ரஞ்சித் ஜேம்ஸ், திரு. ஆனந்தராஜ், திரு. சாலமோன் ஞானசேகர் ஆகியோர் சென்று பணித்தளங்களை ஆரம்பிப்பதற்காக கள ஆய்வு செய்தனர்.

அங்கு மால்டோ மக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு இருப்பதைக் கண்டறிந்தனர். 1998ஆம் ஆண்டு மீண்டும் அதே மாவட்டங்களில் பணித்தளங்களைத் திறப்பதற்கான ஆய்வு செய்யப்பட்டது. 2002ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் முன்னோடி ஊழியர்களாக திரு. சாலமோன் ஞானசேகர், திரு. ரஞ்சித் ஜேம்ஸ் இவர்கள் மால்டாவில் தங்கி ஊழியம் செய்தனர். 2 மாதங்களில் சமஸ்பாடாவில் 5 குடும்பங்கள் திருமுழுக்குப் பெற்றனர். அங்கு ஒரு சபை உருவானது.

2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் காஜோல் என்ற இடத்தில் Rev. உதிப்தகுமார்பாக் குடும்பம் ஊழியம் செய்ய அனுப்பப்பட்டனர். சவுரியா மால்டோ இன மக்கள் மட்டுமல்ல, சந்தால் இன மக்களும் சுவிசேஷத்தை ஆர்வத்துடன் கேட்டனர். 5 ஆண்டுகளில் 2 பணித்தளங்களிலும் மொத்தம் 500 பேர் ஆண்டவரை ஏற்றுக்கொண்டனர். 3 இடங்களில் ஆலயங்கள் கட்டப்பட்டது. 4 சுதேச ஊழியர்கள் மற்றும் 4 தன்னார்வலர்கள் நம் ஊழியர்களுடன் இணைந்து ஊழியம் செய்தனர். 2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மால்டாவில் திரு. ரூபன் சாமுவேல் குடும்பம் அங்கு சென்று ஊழியம் செய்தனர். சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு இருந்ததால் அந்த மாநிலத்தில் அநேக பணித்தளங்கள் திறக்கப்பட்டது.

## நமது ஊழியத்தில் இன்று:

| | | | |
|---|---|---|---|
| பணித்தளங்கள் | - 9 | மிஷனெரிகள் | - 10 குடும்பங்கள் |
| சுதேச ஊழியர்கள் | - 17 | ஆத்துமாக்கள் | - 4848 |
| ஆராதனைக் குழுக்கள் | - 20 | சபைகள் | - 48 |
| கட்டப்பட்டுள்ள ஆலயங்கள் | - 14 | | |

## ஜெபக்குறிப்புகள்:



- வறுமை மற்றும் ஜாதி ஏற்றத்தாழ்வுகள் முற்றிலும் ஒழிக்கப்பட
- இம்மாநிலத்திலுள்ள சுமார் 50 லட்சம் அகதிகளின் நல்வாழ்விற்காக மற்றும் இரட்சிப்புக்காக
- அரசு நிர்வாகங்களில் லஞ்சம், ஊழல் ஒழிய
- அனைத்து மக்களும் மத வேறுபாடின்றி நல்லிணக்கத்தோடு வாழ, சத்தியத்தை அறிகிற அறிவை அடைய
- மதம், ஜாதி அடிப்படையில் ஜனங்களைப் பிளவுபடுத்தும் தீய சக்திகளுடைய திட்டங்களைக் கர்த்தர் முறியடிக்க, அவர்கள் திட்டங்கள் நிறைவேறாது போக
- இம்மாநிலத்தின் அனைத்து கிராமங்களுக்கும் அடிப்படை வசதி செய்து தரப்பட, கல்வியின் தரம் உயர்த்தப்பட
- தேயிலைத் தோட்டத்தில் பணி செய்யும் கூலித் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்பட, அரசாங்கம் அவர்களுக்கு ஏற்ற நல்வாழ்வு திட்டங்களைச் செயல்படுத்த
- இம்மாநிலத்தில் சுவிசேஷத்திற்கு எதிராக செயல்படும் மக்களின் இரட்சிப்புக்காக
- மூடநம்பிக்கைகள் மற்றும் அறியாமைகளுக்கு நேராக வழிநடத்துகின்ற சமயத் தலைவர்கள் மனம் திரும்பி இயேசுவை இரட்சகர் என்று அறிக்கையிட
- இம்மாநிலத்தில் 23 மாவட்டங்களில் உள்ள 37,469 கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட, சபைகள் திரளாய் எழும்ப
- இந்த ஆண்டில் 408 புதிய கிராமங்கள் சந்திக்கப்பட, 795 இடங்களில் இரவு நேரக் கூடுகைகள் நடத்தப்பட, 765 இடங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட, இதன் மூலம் 15,000 ஆத்துமாக்கள், 12 சபைகள்,
- 15 ஆராதனைக் குழுக்கள் உருவாக ஜெபிப்போம்.



Mrs. Vasanthi Emmanuel

# நாகரிகத்தின் தொட்டில்
# ஈராக் எனப்படும் பாபிலோன்

ஈராக் என்பது மேற்கு ஆசியாவிலுள்ள ஒரு நாடு ஆகும். இது அதிகாரப்பூர்வமாக ஈராக் குடியரசு என்று அறியப்படுகிறது. ஈராக் "நாகரிகத்தின் தொட்டில்" என்று செல்லப்பெயர் பெற்றது. ஏனெனில் பாபிலோன் உள்ளிட்ட ஆரம்பகால நாகரிகங்களின் தாயகமாக இருந்தது. அவை எழுத்து மற்றும் நகர-மாநிலங்கள் போன்ற மனித கலாச்சாரத்தின் அடிப்படை அம்சங்களை வளர்த்தன.

**புவியியல்:**

இந்நாட்டின் தெற்கே சவூதி அரேபியா, வடக்கே துருக்கி, கிழக்கே ஈரான், தென் கிழக்கே பாரசீக வளைகுடா மற்றும் குவைத், தென்மேற்கே ஜோர்தான் மற்றும் மேற்கே சிரியா ஆகியவை எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் தலைநகரம் பாக்தாத் என்றும், நாணயம் ஈராக்கி தினார் என்றும் கூறப்படுகிறது.

மற்றொரு புனைப்பெயர்: இரண்டு நதிகளின் நிலம், இது நிலத்தை வளர்க்கும் டைக்ரிஸ் மற்றும் யூப்ரடீஸ் நதிகளைக் குறிக்கிறது. தேசிய கால்பந்து அணி மெசொப்பொத்தேமியாவின் சிங்கங்கள் என்று அழைக்கப்படுகிறது. ஆரம்பகாலத்தில் மெசபடோமியா என்று அழைக்கப்படும் தெற்கு ஈராக், சுமர், அக்காத், பாபிலோன் மற்றும் அசீரியா போன்றவை நாகரிகங்களின் பிறப்பிடமாக இருந்தன.

**புதுமைகள்:**

இந்தப் பண்பாடுகள்தான் முதல் எழுத்து முறை, சக்கரம், ஒழுங்கமைக்கப்பட்ட மதம், மேம்பட்ட கணிதம், வானியல் மற்றும் எழுதப்பட்ட சட்டங்கள் உள்ளிட்ட புரட்சிகரமான புதுமைகளுக்குக் காரணமாக இருந்தன. இன்றும் இங்கு முக்கிய சுற்றுலாத்தலமாகக் காணப்படுவது வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேபுகாத்நேச்சாரின் தொங்கு தோட்டம்.

இந்நாடு 4,38,317 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. 4.60 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. இது உலகிலேயே பரப்பளவின் அடிப்படையில் 58வது மிகப் பெரிய நாடாகவும், 31வது மிக அதிக மக்கள் தொகையையுடைய நாடாகவும் திகழ்கிறது. 80 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்குத் தாயகமாக உள்ள Baghdad ஈராக்கின் தலைநகரம் மற்றும் மிகப் பெரிய நகரமாக உள்ளது.

**வேதாகமத்தில் ஈராக்:**

இன்றுள்ள ஈராக் நம்மால் அறியப்படும் பாபிலோன் எபிரெயர்களால் பாபேல் என்று அழைக்கப்படுகிறது. மேலும் புதிய ஏற்பாட்டின் வெளிப்படுத்தல் புத்தகத்தில், இது "பாபிலோனின் வேசி" மற்றும் "மகா பாபிலோன்" என்று அடையாளமாக குறிப்பிடப்படுகிறது. வரலாற்று ரீதியாக, பாபிலோன் என்ற பெயர் அக்காடியன் "பாப்-இலு" என்பதிலிருந்து வந்தது. அதாவது "கடவுளின் வாயில்" என்று பொருள்படும்.

**பாபேல்:**

எபிரெய பைபிளில் காணப்படும் நகரத்திற்கான எபிரெயப் பெயர். கடவுளின் வாசல்: "பாபிலோன்" என்ற பெயர் பெறப்பட்ட அக்காடியன் பெயரான "பாப்-இலு" என்பதன் அசல் பொருள்.

இன்று, பாபிலோன், பாக்தாத்திற்கு தெற்கே சுமார் 85 கிலோமீட்டர் (53 மைல்) தொலைவில், ஈராக்கில் உள்ள ஒரு பண்டைய மெசொப்பொத்தேமியா நகரத்தின் இடிபாடுகளாக உள்ளது. அரண்மனைகளின் அஸ்திவாரங்கள், பழங்கால சுவர்கள், புனரமைக்கப்பட்ட இஷ்தார் வாயில் மற்றும் பாபிலோனின் சிங்க சிலை உள்ளிட்ட தொல் பொருள் தலத்தைப் பார்வையாளர்கள் காணலாம். இருப்பினும் ஒரு குறிப்பிடத்தக்க பகுதி தோண்டப்படாமல் உள்ளது. யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தலமான இந்த தேசம், பல தசாப்த கால மோதல்கள் மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளால் பாதுகாப்பின் தொடர்ச்சியான சவால்கள் இருந்தபோதிலும், இந்த முக்கியமான வரலாற்று இடத்தைக் காண ஆர்வமுள்ளவர்களுக்கு ஒரு சிறந்த இடமாகும்.

**பொருளாதாரம்:**

ஈராக்கின் பொருளாதாரத்தில் எண்ணெய்த் துறை ஆதிக்கம் செலுத்துகிறது, இது 2024ஆம் ஆண்டில் அந்நிய செலாவணி வருவாயில் 89%ஐ வழங்கியது. அதன் நவீன வரலாற்றில், எண்ணெய்த் துறை சுமார் 99.7% அந்நிய செலாவணி வருவாயை வழங்கியுள்ளது.

**ஜெபக்குறிப்பு:**

- ✦ இஸ்லாம் (94%), கிறிஸ்தவம் (4-5%) என்ற விகிதத்தில் இங்கு கிறிஸ்தவம் காணப்பட்டாலும், சுவிசேஷத்தை அறிவிக்க திறந்த வாசல்கள் காணப்படவில்லை. இந்நிலை மாறி சுவிசேஷம் இங்கு பரவ ஜெபிப்போம்.
- ✦ ஈராக்கில் பெண்களின் திருமண வயதை 9 ஆக குறைக்கும் சர்ச்சைக்குரிய சட்ட மசோதா அந்நாட்டின் பாராளுமன்றத்தில் 2024 August மாதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஆண்குழந்தைகளுக்கு 15 வயதிலும், பெண் குழந்தைகள் 9 வயதை எட்டியதும் திருமணம் செய்யும் இந்நிலை மாற ஜெபிப்போம்.
- ✦ சட்டப்பூர்வ வயது 18 ஆக இருந்தாலும் ஏற்கனவே ஈராக்கில் 28 சதவீகித பெண்களுக்கு அந்த வயதை எட்டும் முன்பே திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது என்று ஐ.நாவில் குழந்தைகள் அமைப்பான UNICEF தெரிவித்துள்ளது. இந்நிலை மாறி ஜனங்கள் விழிப்புணர்வு பெறவும், தேசத்தை ஆளுபவர்களால் இச்சட்டம் திருத்தி அமைக்கப்படவும் ஜெபிப்போம்.
- ✦ இங்கும் வன்முறை, தீவிரவாதம், உள்நாட்டுப்போர், கலவரங்கள், குண்டு வெடிப்பு போன்ற பல காரியங்களுக்கு பிரசித்தி பெற்றிருக்கும் நிலையில் இங்கு சமாதானம் நிலவ ஜெபிப்போம்.


Ms. Beulah Baskar

மிஷனெரி பணியில் நம் கால மனிதர்

# Rev.எட்வர்ட் ராஜதுரை





**பூர்வீகம்:**

திருநெல்வேலி மாவட்டம் மணக்காடு என்ற கிராமத்தில் திரு. ராஜமணி, திருமதி. சொர்ணபாக்கியம் அவர்களுக்கு 6வது மகனாக பிறந்து, ரேனியஸ் அவர்களால் உருவாக்கப்பட்ட கதிட்ரல் உயர்நிலைப் பள்ளியில் படிக்க வைக்கப்பட்டேன்.

**இரட்சிப்பின் அனுபவம்:**

12ஆம் வகுப்பு படிக்கும் போது எனது கிராமமாகிய மணக்காட்டில் நடைபெற்ற முழு இரவு ஜெபக்கூடுகையில் கலந்துக் கொண்டேன். அப்பொழுது பாவமன்னிப்பின் ஜெப நேரத்தில் தேவன் என்னுடைய பாவங்களை எனக்கு உணர்த்தினார். அப்போது என் பாவங்களை எல்லாம் அறிக்கையிட்டு, தேவ சமூகத்தில் பரிசுத்தமாய் வாழ வேண்டும் என்று என்னை ஒப்புக்கொடுத்தேன்.

**மிஷனெரி அழைப்பு:**

நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். என் சிறு வயதில் சுகவீனத்தின் காரணமாக மரிக்கும் தருவாயிலிருந்த என்னை, என் தாய் ஊழியராக அர்ப்பணித்தார்கள். நான் இரட்சிக்கப்பட்ட பின்பு IMS தலைமை அலுவலகத்தின் மிஷனெரி ஊழியங்களுக்காக ஜெபித்து வந்தேன். என் கிராமங்களைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு சுவிசேஷம் அறிவித்து வந்தேன். அப்போது லூக்கா 16:29ஆம் வசனத்தின் மூலமாக தேவன் என்னோடு பேசினார். இங்கு வேதாகமமும், ஆலயமும் உண்டு. ஆனால் வட இந்தியாவில் ஒரு முறை கூட இயேசுவை கேள்விப்படாத மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய வேண்டும் என்ற பாரத்தை எனக்குத் தந்தார். எனது வீட்டிலுள்ளவர்கள் ஆசிரியர் பணி செய்து கொண்டு சபை ஊழியம் செய்யலாம் என்று கூறி ஆசிரியர் பயிற்சி மையத்திற்கு என்னை அழைத்துச் சென்றனர். ஆகவே நான் வீட்டிற்குத் தெரியாமல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரி இயக்கத்தில் இணைந்தேன்.

**ஆரம்ப கால ஊழியம்:**

உத்திரப்பிரதேச மாநிலம் அலகாபாத் மாவட்டத்திலுள்ள சிவேத் என்ற இடத்தில் ஊழியப் பயிற்சியை முடித்து, நமது இயக்கத்தின் வட இந்தியாவின் முதல் மிஷனெரியான அருள்திரு. ஹில்கியா அண்ணனுடன் பஸ்தி பணித்தளத்தில் ஊழியத்தை ஆரம்பித்தேன். அங்கு அநேக கிராமங்களுக்கும், பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கும் மற்றும் சந்தை வெளிகளிலும் கைப்பிரதி ஊழியம், திறந்த வெளி தெருக் கூட்டம் மற்றும் இரவுக் கூடுகை மூலமாக இயேசுவை அறிவித்தேன்.

**முன்னோடி ஊழியராக:**

திருமணத்திற்கு பின்பு எனது மனைவி ஜிக்கியும், நானும் இணைந்து உத்திரப்பிரதேச மாநிலம் ஃபத்தேபூர் மாவட்டத்திலுள்ள படுவா என்ற இடத்தில் பாசி இன மக்கள் மத்தியில், புதிய பணித்தளத்தை ஆரம்பித்து முன்னோடி மிஷனெரிகளாக ஊழியம் செய்தோம். அங்கு நடந்த அற்புதம் மற்றும் அதிசயங்கள் மூலமாக அநேக மக்கள் உண்மையான தேவனை அறிந்துக் கொண்டனர். பின்பு ராஜஸ்தான் மாநிலத்திலும், அதன் பின்பு ஹரியானா மாநிலத்திலுள்ள வால்மிகி இன மக்கள் வாழும் ஜின்த் மாவட்டத்தில் நர்வானா என்ற இடத்திலுள்ள புதிய பணித்தளத்திலும் முன்னோடி மிஷனெரியாக ஊழியம் செய்தோம்.

**விரிவாக்க பணி:**

2013ஆம் ஆண்டு என் மனைவிக்கு ஏற்பட்ட சுகவீனத்தின் காரணமாக, நாங்கள் கடைசியாக ஊழியம் செய்து வந்த டெல்லியில் உள்ள பட்பெட்கஞ் பணித்தளத்திலிருந்து, தமிழ்நாட்டிற்கு மாறுதல் பெற்றோம். 5 ஆண்டுகள் வேலூரிலும், 4 ஆண்டுகள் தூத்துக்குடி வட பிராந்தியத்திலும், தென்நெல்லை பிராந்தியத்திலும் (டோனாவூர்) முன்னேற்றப்பணி ஊழியத்தைச் செய்துவிட்டு, இப்பொழுது ஈரோடு பிராந்திய முன்னேற்றப்பணி செய்து வருகிறோம்.


**ஜெபியுங்கள் :**

- ★ இங்குள்ள வாலிபர்கள் மத்தியில் எழுப்புதல் காணப்பட்டு, ஆத்துமாக்கள் அழிவதைக் குறித்த பாரம் மற்றும் ஜெபப் பாரம் பெற்றவர்களாய் மாற
- ★ இவர்களிலிருந்து இரண்டாம் கட்ட தலைவர்கள் எழும்ப
- ★ எங்கள் குடும்பத்திற்காகவும், பிரயாண பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

**“ஆத்தும தாகத்தோடு இருக்கிற இயேசுவுக்காய்**
**ஆத்தும பாரத்தோடு, இயேசுவின் தாகம் தீர்க்க வருவாயா?**
**ஆத்தும தாகமுள்ள உன்னையே, இயேசு இருகரம் நீட்டி வா என அழைக்கிறார்”**

# சிக்கிள் செல் நோய்

## SICKLE CELL DISEASE



நம் ரத்தத்தில் சாதாரணமாக வட்ட வடிவில் இருக்கும் சிவப்பணுக்கள், உடலில் உள்ள அனைத்து பாகங்களுக்கும் ஆக்ஸிஜனை எடுத்துச் செல்கின்றன. சிக்கிள் செல் (SICKLE CELL) நோயில், இந்த சிவப்பணுக்கள் வளைந்த அரிவாள் அல்லது வாழைப் பழ வடிவில் மாறிவிடுகின்றன. இந்த மாற்றம் காரணமாக, அவை எளிதில் உடைந்து ரத்தசோகையை (ரத்தம் குறைதல்) உண்டாக்குகின்றன. சாதாரணமாக, சிவப்பணுக்கள் 120 நாட்கள் உயிர் வாழும் நிலையில், சிக்கிள் செல்கள் (SICKLE CELL) 10-20 நாட்கள் மட்டுமே உயிர் வாழ்கின்றன. இதனால் ரத்தசோகை ஏற்படுகிறது. இந்த செல்கள் ரத்த ஓட்டத்தைத் தடைசெய்வதால், கடுமையான வலி, வீக்கம் அல்லது உறுப்புகளுக்கு பாதிப்பு ஏற்படலாம். இது பரம்பரை நோயாக, பெற்றோரிடமிருந்து குழந்தைகளுக்கு ஜீன்கள் மூலம் கடத்தப்படுகிறது. இது பெரும்பாலும் ஆப்பிரிக்கா, இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் மத்திய தரைக்கடல் நாடுகளைச் சேர்ந்தவர்களை அதிகம் பாதிக்கிறது.

**சிக்கிள் செல் (SICKLE CELL) நோயினால் ஏற்படும் முக்கிய உடல்நலப் பிரச்சினைகள்:**

- பக்கவாதம் (STROKE)
- சிறுநீரகம், கல்லீரல் மற்றும் நுரையீரல் பிரச்சனைகள்
- எலும்பு மற்றும் மூட்டு பாதிப்புகள்
- பார்வை இழப்பு
- கர்ப்பகால சிக்கல்கள்

இந்த நோய்க்கு முழுமையான மருந்து இல்லை. இருப்பினும், சில அரிதான சமயங்களில், எலும்பு மஜ்ஜை அல்லது ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும். ஹைட்ராக்ஸியூரியா (HYDROXYUREA) போன்ற மருந்துகள், ரத்தமாற்றம் (BLOOD TRANSFUSIONS), தடுப்பூசிகள் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் (ANTIBIOTICS) போன்ற சிகிச்சைகள் மூலம் இந்த நோயை ஓரளவு கட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

**புள்ளிவிவரங்கள்:**

இந்தியாவில், தேசிய சிக்கிள் செல் ரத்த சோகை ஒழிப்புத் திட்டம் (NATIONAL SICKLE CELL ANAEMIA ELIMINATION MISSION) சமீபத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. அதன் சமீபத்திய சில புள்ளிவிவரங்கள்:

1. இதுவரை சுமார் 6 கோடி (60 மில்லியன்) மக்கள், பெரும்பாலும் பழங்குடியினர் வசிக்கும் மாநிலங்களில், பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர். அவர்களில், சுமார் 2.15 லட்சம் (2,15,000) பேர் சிக்கிள் செல் (SICKLE CELL) நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
2. சுமார் 16.7 லட்சம் (16,70,000) பேர் சிக்கிள் செல் பண்பை (TRAIT) கொண்டுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.
3. பரிசோதனை செய்யப்பட்ட சுமார் 2.6 கோடி (26 மில்லியன்) பேருக்கு சுகாதார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
4. இந்திய மாநிலங்களில், ஒரிசா (96,000), மத்திய பிரதேசம் (30,500-30,700), குஜராத் (28,150), மகாராஷ்டிரா, சத்தீஸ்கர் போன்ற மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் உள்ளனர்.
5. குறிப்பிட்ட பகுதிகளில் (உதாரணமாக, நாக்பூர் மாவட்டத்தில் பள்ளி மாணவர்களிடையே) நடத்தப்பட்ட பரிசோதனையில், சுமார் 0.66% மாணவர்களுக்கு SCDயும், சுமார் 5.75% மாணவர்களுக்கு சிக்கிள் செல் (SICKLE CELL) பண்பும் இருப்பது தெரியவந்துள்ளது.

**ஜெபக் குறிப்புகள்:**

1. இந்த நாள்பட்ட சிக்கிள் செல் நோயுடன் வாழ்பவர்களுக்கு ஏற்படும் பயம், மனச்சோர்வு, மற்றும் மன உளைச்சலில் இருந்து அவர்களுக்கு அமைதி கிடைக்க ஜெபியுங்கள்.
2. கர்த்தரின் குணமாக்கும் கரம் அவர்களைத் தொட்டு, தினந்தோறும் அவர்களுக்கு புதிய பலத்தைத் தந்து, ரத்தசோகை காரணமாக ஏற்படும் பலவீனத்தில் இருந்து அவர்களுக்கு விடுதலை கிடைக்க ஜெபியுங்கள்.
3. தூக்கமில்லாத இரவுகளிலும், மருத்துவமனையில் நீண்ட நாட்கள் தங்கும்போதும், அவர்களுக்கு மன அமைதி கிடைக்க ஜெபியுங்கள்.
4. நோய்த் தொற்றுகள், பக்கவாதம், உறுப்புப் பாதிப்புகள் மற்றும் பிற உடல்நல அபாயங்களில் இருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்க ஜெபியுங்கள்.
5. ஒவ்வொரு நோயாளிக்கும் மலிவான விலையில் மருந்துகள், ரத்தமாற்றம், மற்றும் மேம்பட்ட சிகிச்சைகள் (ஹைட்ராக்ஸியூரியா, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, மரபணு சிகிச்சை போன்றவை) கிடைப்பதற்கு ஜெபியுங்கள்.
6. நோயாளிகளை தினந்தோறும் ஆதரிக்கும் குடும்பங்களுக்கு பலம், பொறுமை மற்றும் தேவையான உதவிகள் கிடைக்க ஜெபியுங்கள்.

**"நான் உனக்கு ஆரோக்கியம்வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்". - எரேமியா 30:17**



# போண்டா மக்கள்

Mr. Suriya Kumar

நவீன இந்தியாவில் இன்றும் உடலை மறைக்க பாசிகளைப் பயன்படுத்தும் ஒரு கூட்ட மக்கள் இருக்கிறார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா? குறிப்பாக ஒடிசா மாநிலத்திலுள்ள 13 பாதிக்கப்பட்ட பழங்குடி மக்களில் ஒன்று போண்டா மக்களாவார்கள்.

போண்டா இனத்தவர்கள் மிகவும் பழமையான முண்டா இனக்குழுவைச் சேர்ந்தவர்கள். 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சுமார் 12,000 பேர் உள்ளனர். இவர்கள் இந்தியாவின் தென்மேற்கு ஒடிசாவின் மல்கன்கிரி மாவட்டத்தின் தனிமைப்படுத்தப்பட்ட மலைப் பகுதிகளில், ஒடிசா, சத்தீஸ்கர் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களின் சந்திப்பிற்கு அருகில் வாழ்கின்றனர்.

மேல் போண்டாக்கள், கீழ் போண்டாக்கள் என 2 பிரிவுகள் உண்டு. மேல் போண்டாக்களுக்கு வெளி உலகத்துடன் கிட்டத்தட்ட எந்த தொடர்பும் இல்லை.

## ஆடை அணிகலன்கள்:

போண்டா மக்கள் பொதுவாக அரை ஆடை அணிந்தவர்கள். பெண்கள் தடிமனான வெள்ளி கழுத்துப் பட்டைகளை அணிவார்கள். போண்டா பெண்கள் மொட்டையடித்த தலைகளைக் கொண்டுள்ளனர். மேலும் இடுப்பை மறைக்கும் நீளமான துணியான ரிங்காவை மட்டுமே அணிவார்கள். அவர்களின் உடல்கள் வண்ணமயமான மணிகளின் சரங்களால் மூடப்பட்டிருக்கும். போண்டா பெண்கள் தங்கள் கழுத்தை மறைக்கும் உலோக மோதிரங்களையும், கைகளில் வளையல்களையும் அணிவார்கள்.

## குடும்ப அமைப்பு:

இந்தியாவில் சுதந்திரமற்ற உழைப்பு அல்லது "கோட்டி" அமைப்பு போண்டா மக்களால் "குஃபாம்" என்று அழைக்கப்படுகிறது. ஒரு ஆண் கொத்தடிமை "குஃபாம்-ரெம் "என்றும், ஒரு பெண் கொத்தடிமை "குஃபாம்-பாய்" என்றும் அழைக்கப்படுகிறது. போண்டா சிறுவர்கள் 10 முதல் 12 வயதுக்குள் திருமணம் செய்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விவாகரத்து, "லுங் சிசி" என்றும் அழைக்கப்படுகிறது, இது போண்டா மக்களிடையே ஒரு பிரச்சனையாகும். சில தீவிர சூழ்நிலைகளில், ஒரு போண்டா பெண் விபச்சாரத்திற்காக விவாகரத்து செய்யப்பட்டால், முன்னாள் கணவர் தங்கள் திருமணத்திற்கு செலுத்தப்பட்ட விலையை விட இரு மடங்கு கேட்கிறார். போண்டா சமூகத்தில், பெண்கள் ஒரு சலுகை பெற்ற நிலையை அனுபவிக்கிறார்கள். போண்டா பெண்கள் பெரும்பாலும் தங்களை விட குறைந்தது ஐந்து முதல் பத்து வயது இளைய ஆண்களைத் திருமணம் செய்கிறார்கள். போண்டா மக்களிடையே பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையை விட அதிகமாக உள்ளது. போண்டா மக்களின் தலைமை கடவுள் மகாபிரபு (பெரிய கடவுள்) என்று அழைக்கப்படுகிறார்.

## சமுதாய பிரச்சனைகள்:

போண்டா மலைகளில் உள்ள 245 வீடுகளில் சுமார் 62 வீடுகள் கடனில் உள்ளன. பணமாக எடுக்கப்பட்ட கடன்களுக்கு வட்டி விகிதங்கள் வசூலிக்கப்படுகின்றன, மேலும் இந்த நிதிகள் பெரும்பாலும் மணமகள் வரதட்சனை செலவு, அபராதங்கள் மற்றும் சமூக-மத சடங்குகளைச் செய்வதற்கு பணம் செலுத்துகின்றனர். இதன் விளைவாக, கடன் செலுத்துதல் கடினமாகிறது, நிலையான அபராதங்கள் மற்றும் வட்டி விகிதங்கள் அதிகரிக்கப்படுகின்றன. பெரும்பாலும் போண்டா மக்கள் கடன் அடிமைத்தனத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள், மேலும் நிலம், மரங்கள், விலங்குகள் போன்ற சொத்துக்களை விற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

*போண்டா பழங்குடியினரின் கல்வியறிவு விகிதம் (14 சதவீதம் வரை மட்டுமே) மிகக் குறைவு.*

## ஜெபியுங்கள்:

- இம்மக்களைச் சந்திப்பதற்கு இருக்கும் தடைகள் மாற
- இவர்கள் கல்வி அறிவு பெற
- இவர்கள் மத்தியில் உள்ள கடன் மற்றும் அடிமைத்தனம் மாற
- இவர்கள் அனைவரும் கல்வாரி அன்பைக் காண ஜெபியுங்கள்

# ஆன்லைன் சூதாட்ட / பண விளையாட்டு செயலிகள் (APPS) மோசடி

Ms. Lily Reaiah Grace



இன்றைய டிஜிட்டல் உலகில், ஸ்மார்ட்போன்களும், இணையமும் பலவிதமான செயலிகளையும், விளையாட்டுகளையும் எளிதாக அணுக உதவுகின்றன. இருப்பினும், சட்டவிரோதமாகச் செயல்படும் ஆன்லைன் சூதாட்ட செயலிகளின் வளர்ச்சி ஒரு கவலையளிக்கும் விஷயமாகும். இந்த செயலிகள் ஆரம்பத்தில் பாதிப்பில்லாதவை போலத் தோன்றினாலும், பண இழப்பு, அடிமைத்தனம் மற்றும் மனநலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கலாம்.

'விரைவாகப் பணம் சம்பாதிப்பது' என்ற கவர்ச்சியான வாக்குறுதி பலரது வாழ்க்கையை அழிவுக்குள் தள்ளக்கூடும். சில ஆன்லைன் விளையாட்டு செயலிகள், கடன் செயலிகளுடன் (LOAN APPS) தொடர்பு வைத்துள்ளன. இந்த செயலிகள் எந்தவிதமான சரியான கடன் பரிசோதனைகளும் இல்லாமல், அதிக வட்டிக்கு உடனடியாகக் கடன் வழங்குகின்றன. இதில் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சிக்கலான சூழ்நிலை ஏற்படும்போது, மிரட்டி பணம் பறிக்கும் கும்பல்கள் (LOAN SHARKS), சம்பந்தப்பட்டவர்களின் போனை ஹேக் செய்து, மார்பிங் செய்யப்பட்ட புகைப்படங்களை அவர்களின் தொடர்புகளுக்கு அனுப்புவோம் என்று மிரட்டவும் முயற்சிக்கின்றனர்.

## *வாழ்வாதாரம்:*

இந்த செயலிகள் இந்தியாவில் தடை செய்யப்பட பல காரணங்கள் உள்ளன:

- **பணமோசடி:** இந்த செயலிகள், முறையான விதிமுறைகள் இல்லாமல் இந்தியாவிற்கு வெளியே சட்ட விரோதமாக பணத்தை மாற்றுகிறது.
- **அடிமைத்தனம்:** இந்த விளையாட்டுகள் மிகவும் அடிமைப்படுத்தும் தன்மை கொண்டவை. குறிப்பாக இளைஞர்களிடையே பண இழப்பு மற்றும் கடனை ஏற்படுத்துகின்றன.
- **நிதி இழப்புகள் மற்றும் மோசடிகள்:** பல சூதாட்ட செயலிகள் நிதி மோசடிக்கு காரணமாகின்றன. இதில் வென்ற பணத்தை வழங்காமல் ஏமாற்றுவது, தரவு திருட்டு மற்றும் மிரட்டி பணம் பறித்தல் ஆகியவை அடங்கும்.
- **மனநலப் பிரச்சினைகள்:** கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய அழுத்தம் மற்றும் கடன் குறித்த வெட்க உணர்வு ஆகியவை மனக்கவலை, மனச்சோர்வு மற்றும் தற்கொலை எண்ணங்களுக்கு வழிவகுக்கலாம்.
- **சமூக தனிமை:** இந்த விளையாட்டுகளுக்கு அடிமையாவது, குடும்பம் மற்றும் நண்பர்களுடனான உறவுகளைப் பாதித்து, மனநலப் பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கக்கூடும்.

## *உண்மையான நிகழ்வுகள்:*

இந்தியாவில் ஆன்லைன் விளையாட்டுகளுக்கு அடிமையாவதால் ஏற்பட்ட தற்கொலைகள் பல பதிவாகியுள்ளன:

- ஆந்திரப் பிரதேசத்தில், 21 வயது பொறியியல் மாணவர், ஆன்லைன் விளையாட்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாகத் தற்கொலை செய்து கொண்டார்.
- கர்நாடகாவில், 31 மாதங்களில் 32 தற்கொலைகள் பதிவாகியுள்ளன. பெரும்பாலானவை ஆன்லைன் சூதாட்டம் மற்றும் கடன் குவிப்புடன் தொடர்புடையவை.
- திண்டுக்கல்லில், 22 வயது கல்லூரி மாணவர், ஆன்லைன் ரம்மி விளையாட்டில் ₹2 லட்சம் இழந்ததால் தற்கொலைக்கு முயன்றார்.
- சென்னையில், பவானி என்ற 29 வயது கணிதப் பட்டதாரி, ஆன்லைன் ரம்மியில் ₹3 லட்சம் மற்றும் 20 சவரன் தங்க நகைகளை இழந்ததாலும், கீழ்ப்பாக்கத்தில், 20 வயது கல்லூரி மாணவர், "காஸ்டோ கிளப்" என்ற ஆன்லைன் விளையாட்டு செயலியில் தனது சேமிப்புகள் அனைத்தையும் இழந்ததாலும் தற்கொலை செய்து கொண்டனர்.

## *ஒரு திருப்புமுனை:*

'ஆன்லைன் விளையாட்டு ஒழுங்குமுறை மசோதா, 2025' லோக்சபா மற்றும் ராஜ்யசபா ஆகிய இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவின் ஒப்புதலையும் பெற்றுள்ளது. இந்த மசோதா ஆன்லைன் சூதாட்ட செயலிகளைத் தடைசெய்வதையும், அதே நேரத்தில் மின்-விளையாட்டுகள் மற்றும் ஆன்லைன் சமூக விளையாட்டுகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

1 தீமோ. 6:10ஆம் வசனம் நமக்கு பண ஆசையின் ஆபத்துகளைப் பற்றி எச்சரிக்கிறது. "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்". கிறிஸ்தவர்களாகிய நாம், இந்தத் தடைசெய்யப்பட்ட சூதாட்ட செயலிகள் மற்றும் இணையதளங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஜெபிப்போம்.

## *ஜெபியுங்கள்:*

- இந்த செயலிகளுடன் தொடர்புடைய அபாயங்களை மக்கள் உணர்ந்துகொள்ள
- மோசடியாளர்கள் தங்கள் தீய வழிகளிலிருந்து மனந்திரும்ப, இது போன்ற சைபர் குற்றங்களைத் தீர்க்கும் காவல் துறையினர், இணையப் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பிற அதிகாரிகள் விரைவாக, ஞானமாக மற்றும் நீதியுடன் செயல்பட
- அடிமைத்தனம் மற்றும் மனநலப் பிரச்சினைகளால் அவதிப்படுபவர்கள் குணமடைய, அவர்களின் மறுவாழ்விற்காக
- இளைஞர்கள் இந்த செயலிகளின் கவர்ச்சி மற்றும் "விரைவாகப் பணம்' என்ற வாக்குறுதியிலிருந்து பாதுகாக்கப்பட
- மக்கள் தங்களுக்கு இருப்பவற்றில் மனநிறைவைக் காண, பண ஆசையால் அடிமைப்படாமலிருக்க ஜெபிப்போம்.



# தென் பிராந்திய சர்ச் கவுன்சில் - தேன்கனிக்கோட்டை

(நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அங்கம்)





ஆலயத்திற்காக நிலம் கொடுத்த திரு. நரசிம்மப்பா

PRAYER POINTS -BACK TO REVIVAL

## பாலதொட்டனபள்ளி திருச்சபை வரலாறு

Rev. Ruban Ramalingam

தேன்கனிக்கோட்டை பிராந்தியத்திலுள்ள கிராமங்களில் ஆரம்ப நாட்களிலே தேன்கனிக்கோட்டை, இருதுகோட்டை மற்றும் கிரியானபள்ளி ஆகிய இடங்களிலிருந்து மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்கள் வாகன வசதியற்ற காலங்களில் கால்நடையாய் மற்றும் சைக்கிளில் சென்று நற்செய்தியை அறிவித்தனர். முதல் ஊழியராக அருள்திரு. தாமஸ் அண்ணன் 1988ஆம் வருடம் இப்பகுதியில் ஊழியத்தை ஆரம்பித்தார். முதலாவதாக கொள்ளப்பள்ளியிலுள்ள திருமதி. கௌரம்மா அவர்களது இல்லத்தில் வைத்து ஜெபக்கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது அப்பகுதியிலிருந்த திரு. நரசிமப்பா என்பவர் ஆலயத்திற்காக நிலம் கொடுத்தார். ஆலய சுவர் கட்டியெழுப்பிக் கொண்டு இருக்கும்போது கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் இரண்டு முறை ஆலயக் கட்டிடத்தைச் சேதப்படுத்திவிட்டார்கள். கிராமத்தில் நமக்கு ஆதரவு இல்லாததால் காவல்துறையின் உதவியோடுகூட பல எதிர்ப்புகளின் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டது தான் பாலதொட்டனபள்ளி ஆலயம். அவ்வளவு போராட்டங்களுக்கு மத்தியில் தேவன் வல்லமையாய் நமது ஊழியர்களைப் பயன்படுத்தினார்.

மஞ்சுளா சகோதரியின் 6 வயது பெண் பெலவீனமாகி சாப்பிட முடியாமல் தண்ணீர் மட்டுமே குடித்து வந்தாள். கர்நாடகாவிலுள்ள சிறப்பு மருத்துவமனை மற்றும் அருகிலுள்ள அரசு மருத்துவமனைக்கும் கொண்டு சென்று மருத்துவம் பார்த்தும், எந்த பயனுமில்லாமல் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டனர். அப்பொழுது அக்கிராமத்திலிருந்த நமது ஊழியரின் வீட்டிற்கு பிள்ளையைக் கொண்டு வந்தனர். அவரும் அவர்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி அறிவித்து, கர்த்தர் மேல் விசுவாசம் வைக்கும்படி கூறி, ஜெபித்து தண்ணீர் கொடுத்தார். ஏழு நாட்களாக சாப்பிடாமலிருந்த அந்த பிள்ளை தண்ணீரை குடித்தது. பிறகு ஊழியர் ஊற்றிக் கொடுத்த தோசையையும் சாப்பிட்டாள். இது பெற்றோருக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கியது. மிகவும் வாஞ்சையோடு அன்றிரவு ஆலயத்தில் நடைபெற்ற இரவு கூடுகைக்கு தனது மகளைக் கொண்டு வந்தனர். இத்தனை நாள் படுத்த படுக்கையிலே சிறுநீர் மற்றும் மலம் கழித்துக்கொண்டிருந்தவள், தற்போது ஆலயத்தில் அங்கும், இங்கும் செல்வதை பார்த்த அனைவரும் சந்தோஷமடைந்தனர். அன்று சுகம் பெற்ற அவள் இன்றுவரை ஆரோக்கியத்துடன் இருக்கின்றாள்.

தொட்டி என்ற கிராமத்திலுள்ள சகோதரி 3 ஆண்டுகளாக திமிர்வாத நோயினால் பாதிக்கப்பட்டு கை கால்கள் செயலிழந்து போன அவரது கணவர் திரு. மாதேஷ் என்பவரை நமது ஊழியரிடம் கொண்டு வந்தார். நமது ஊழியர் அவர்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிவித்ததோடு, அவருக்காக ஜெபம் செய்து எண்ணெயைச் செயல்படாத கை மற்றும் கால் பகுதிகளில் அவரே தடவியுள்ளார். அப்போதே அவர்கள் முழு மனதுடன் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து எனக்கு சுகமாகிவிட்டால் அந்த இயேசுவை ஏற்றுக் கொள்கிறேன் என்றார். அடுத்த வாரத்திலேயே அவர் சுகம் பெற்று 1 கி.மீ. தொலைவிலுள்ள ஆலயத்திற்கு நடந்தே வந்து தேவாலயத்தில் தேவனை மகிமைப்படுத்தினார். இது அக்கிராமத்திலுள்ள அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது.

கௌடா இனத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் மைக்ரோ கம்பெனியில் நல்ல சம்பளத்தில் வேலை செய்துக்கொண்டிருந்தார். அப்போது அவரது அண்ணன் குடும்பம், இவர் கொடுத்த 15 லட்சத்தை திருப்பி கேட்கிறார் என்று சொல்லி அவருக்கு செய்வினை செய்து விட்டார்கள். எங்கு போயும் குணமாகாமலிருந்த அவருக்கு அவரது தாயாரே சாப்பாடு ஊட்டுவது, குளிப்பாட்டுவது, சிறுநீர் மற்றும் மலம் சுத்தம் செய்வது போன்ற வேலைகளைச் செய்து வந்தார். அவருடைய கம்பெனியிலிருந்து இன்னும் ஒன்றரை மாதத்திற்குள் வேலைக்கு வரவில்லையென்றால் நிரந்தரமாக வேலையைவிட்டு நிறுத்தி விடுவோம் என்று சொல்லியிருந்தனர். என்ன செய்வதென்றே தெரியாமலிருந்த அவருக்காக ஊழியர்கள் பாரத்தோடு ஜெபித்தபோது கர்த்தர் அவருக்கு பூரண சுகம் கொடுத்தார். மீண்டும் அவர் ஒரு மாதத்திலேயே வேலைக்குச் சென்றார். தற்பொழுது அவர் பெங்களூர் பட்டணத்தில் கர்த்தருக்கு ஜீவனுள்ள சாட்சியாக வாழ்ந்து கொண்டிருகின்றார்.

துதிக்க:

- ✦ சுவிசேஷ வாசனை வீசிடாத அக்காலங்களிலேயே கர்த்தர், இப்பகுதியில் தமது வல்லக் கரத்தை நீட்டி அற்புதங்களைச் செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.
- ✦ இந்தப் பகுதிகளில் சுவிசேஷ ஊழியம் செய்த நமது இயக்கத்தின் மிஷனெரி அண்ணன்மார்கள் மற்றும் சுதேச ஊழியர்களுக்காக சர்வவல்ல தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க:

- ✦ இந்த கிராமத்தில் மதவாத கட்சிகளின் அமைப்புகள் தீவிரமாக செயல்படுகின்றன. இதில் அநேக வாலிபர்கள் மற்றும் மாணவர்களும் உறுப்பினராக செயல்படுகின்றனர். இவர்களுக்கு மத்தியில் தேவனுடைய கரம் வல்லமையாய் செயல்பட பாரத்தோடு ஜெபியுங்கள்.
- ✦ மதவாத கட்சிகளாலும், திருச்சபை எதிர்ப்பாளர்களான சில ஊழியர்களாலும் இந்த கிராமத்தில் நமது திருச்சபையின் ஆரம்ப நாட்களில், கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து தற்போது விசுவாசத்தில் சோர்ந்து போய் இருப்பவர்கள் அநேகர். அவர்கள் மீண்டும் ஆலயம் வந்து கர்த்தரைத் தொழுதுக் கொள்ள ஜெபியுங்கள்.
- ✦ சவால் நிறைந்த கிராமத் திருச்சபைகளில் தேவப் பணியை செய்வதற்கு அர்ப்பணமுள்ள இளம் சுதேசப் பணியாளர் குடும்பங்கள் திரளாகத் தங்களை அர்ப்பணித்து வர பாரத்தோடு ஜெபியுங்கள்.

# ஜெபிக்கலாம் வா...

VIRAL NEWS



## உலக நாடுகளில் காணப்படும் போராட்டங்கள்

**Nepal Protest: Gen Z activists demand parliament dissolution, constitutional amendment**

உலக நாடுகளில் ஏற்படும் போராட்டங்கள், கலவரங்கள் போன்ற நிலைகள் மாறி, மக்களுக்கு வேண்டிய நன்மைகள் அவர்களுக்கு சுமூகமான முறையில் கிடைக்க ஜெபிப்போம்.

## உலக நாடுகளில் கலைக்கப்படும் அரசாங்கங்கள்

**Three National Governments destabilised and dissolved in three consecutive days**

நிலையற்ற அரசியல் சூழலால் உலக நாடுகளில் ஏற்படும் குழப்பங்கள் மாறவும், நிலையான சூழல் அமையவும் ஜெபிப்போம்.



## தேசத்தின் எல்லைகளில் காணப்படும் மின்னணு மோசடி

**Hyderabad Cyber Crime Police execute a series of out-of-state operations, arresting 61 suspects from 14 States and refunding a total of Rs 1,01,39,338 to fraud victims.**




மின்னணு மோசடியால் மக்கள் பாதிப்படையாதபடிக்கும், அதில் ஈடுபடுவோர் மனந்திரும்பி நியாயமான செயல்களில் ஈடுபடவும் ஜெபிப்போம்.




## கொலை செய்யும் கருத்தியல் வேறுபாடு

**Charlie Kirk killing: Suspect had 'obsession' with the conservative influencer, FBI says**

தனி மனித கருத்துரிமையை சக மனிதர்கள் மதிக்கவும், மனித அன்பு உலகில் நிலைநாட்டப்படவும் ஜெபிப்போம்.

## தேசத்தில் காணப்படும் லஞ்சம்

**Sailor Alleges Indian Port Authorities Demand Bribes and Steal Goods from Vessels**

தேசத்தில் எங்கும் லஞ்சம் இல்லாமல், உண்மையான சேவை மனதோடு எல்லா துறைகளும் இயங்க ஜெபிப்போம்.







## உலகத்தில் ஏற்படும் பூகம்பங்கள்

**Taliban calls for foreign help after deadly Afghanistan earthquake.**

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவி கிடைக்கவும், தேவன் உலகத்தை இது போன்ற பேரிடர்களிலிருந்து பாதுகாக்கவும் ஜெபிப்போம்.



## தேசத்தில் சுதந்திரத்தை எதிர்க்கும் சட்டங்கள்


**A 20-day-old baby girl who was found buried alive in the northern Indian state of Uttar Pradesh is fighting for survival, hospital authorities say.**

பெண் குழந்தை கொலை நம் தேசத்திலிருந்து முற்றிலுமாக ஒழிக்கப்படவும், மக்களுக்கு வேண்டிய விழிப்புணர்வு கிடைக்கவும் ஜெபிப்போம்.

## சட்டவிரோதமான குற்றங்கள்

**71-Year-Old woman came from America to India Murdered in Ludhiana.**

நம் தேசத்தில் இது போன்ற கொலைகள் நடைபெறாமல் இருக்கவும், குறிப்பாக குடும்பங்களுக்குள் காணப்படும் கொலை குற்றங்கள் ஒழியவும் ஜெபிப்போம்.



Mr. R. George Daniel



# பிசாசு துரத்தும் ஊழியம்

3rd WEEK MESSAGE

JESUS MISSION

Mr. Isaac

தலைப்பை வைத்து இயேசுவை மதிப்பிட்டுவிடாதீர்கள். இங்கே நாம் காண இருக்கும் சத்யம் பேய்களை துரத்தும் விதம். அதன் விளைவு மட்டுமல்லாமல், நோக்கத்தையும் அறியப் போகிறோம். இங்கு இந்த ஊழியத்தை நிறைவேற்ற அனைவராலும் இயலும். ஏன் என்றால், அந்த அதிகாரத்தை இயேசு நமக்கும் கொடுத்திருக்கிறார். இதை மட்டுமே செய்ய நினைத்தால் தான் பின்விளைவுகளையும், பேய் துரத்த படாதபாடுபடுவதையும் அனுபவிக்க வேண்டியதாயிருக்கும். ஆனால் சுவிசேஷத்திற்கும், தனிமனித இரட்சிப்புக்கும் பயன்படுத்தினால் இதன் மேன்மை மற்றும் மகிமை அலாதியானது மற்றும் இன்பமானது.

இயேசுவானவர் ஊழியத்தின் மத்தியில் தான் அசுத்த ஆவிகளையும், பேய்களையும் துரத்தினாரே ஒழிய, அதையே ஒரு ஊழியமாக எடுத்து செய்ய வரவில்லை. இதன் மூலம் அவர் நமக்கு கற்றுக்கொடுத்த பாடம்.

- ✦ விடுதலை என்பது இரட்சிப்பின் ஒரு பகுதி. பாவம், பயம், அசுத்த எண்ணம் மற்றும் வார்த்தைகள், பிறரை அச்சுறுத்துதல், பிறருக்கு பாரமாயிருந்ததிலிருந்து சுகம் ஆவது என்பது ஒரு அர்த்தம்.
- ✦ அது மட்டுமல்லாமல் இயேசுவுக்கு இதின் மேல் அதிகாரம் இருக்கிறது (பிலி. 2:9-11 )என்பதையும்,
- ✦ தேவனுடைய இராஜ்யம் என்பது சாத்தானின் வல்லமையை உடைக்கிறது (லூக்கா 11:20) என்பதையும் நமக்கு தெளிவுபடுத்துகிறது.

மேலும் பிசாசு துரத்தும் அதிகாரம் சுவிசேஷம் சொல்வோருக்கும் மற்றும் இராஜ்ய கட்டுமான பணியில் உள்ளவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது (மாற்கு 16:17, லூக்கா 10:17-19). அதே நேரத்தில் பிசாசுகளை மட்டும் துரத்த முயன்றால் தோற்றுப் போவீர்கள். இயேசு சொல்வதைக் கவனமுடன் வாசியுங்கள் (மாற்கு 9:29). இவ்வகையான பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலும் அன்றி வேறு ஒன்றினாலும் போகாது என்ற வேதப்பகுதியை அநேகர் தவறாக புரிந்துக் கொண்டிருக்கின்றனர். மற்றவர்கள் சொல்வதை வைத்து இதை புரிந்த விதம் என்னவென்றால் பிசாசு - பலவகைகள், பெரிய பிசாசை விரட்ட அதிக ஜெபம், அதிக உபவாசம் தேவை என்பதே. என்னை பொறுத்தவரை ஜெபமும், உபவாசமும் நம்முடைய அனுதின வாழ்க்கையின் ஒழுங்குமுறை. அதை விட்டு விட்டு, ஊழியம் செய்தால் ஊழியம் நடைபெறும். ஆனால் பிசாசுகள் ஓடாது. சாதாரணமாக நம்மில் அநேகர் பிசாசை விரட்ட "அதிக சத்தம்போட்டு ஜெபிப்பது", "தலையில் கைவைத்து அழுத்துவது", "அளவுக்கு மீறி திரும்ப திரும்ப கட்டளையிடுவது", "பிசாசோடு பேசிக்கொண்டிருப்பது" கடைசியில் களைப்படைந்து கீழே தள்ளி விடுவது. இதில் பிசாசு பிடித்த நபர் மயக்கத்தினால் விழுவார். ஆனால் பிசாசு போனதா? என்பது மில்லியன் டாலர் கேள்விதான்.


நாம் இப்பொழுது இயேசுவின் அற்புதத்தை பார்ப்போம்:

1. முதல் பிசாசை ஜெப ஆலயத்தில் துரத்தினார் (மாற்கு 1:23-26, லூக்கா 4:33-36).
2. கதரேனருடைய நாட்டில், கல்லறைத் தோட்டத்தில் பிசாசு பிடித்த (லேகியோன்) இரண்டு நபர்களை இயேசு சுகமாக்கினார் (மாற்கு 5:1-10, மத்தேயு 8:28-39).
3. பிசாசு பிடித்த ஊமையனைச் சுகமாக்கினார் (மத்தேயு 9:32, 33).
4. கானானிய ஸ்திரீயின் மகளைச் (சீரோபேனிகியா தேசத்தாள்) சுகமாக்கினார் (மத்.15:22-28, மாற்கு 7:25-30).
5. ஊமையும், செவிடுமான சிறுவனை (ஒரே பிள்ளை) அலைக்கழிக்கும் பிசாசினிடமிருந்து விடுவித்தார் (மாற்கு 9:17-27, மத். 17:14-18, லூக்கா 9:37-43).
6. குருடும், ஊமையுமான பிசாசை துரத்தினார் (மத். 12:22-29, லூக்கா 11:14-20).

இந்த அற்புதத்தின் விளைவால் சுகம் பெற்றவர்கள், சுவிசேஷத்திற்கு சாட்சி பகிர்ந்ததோடு, சுவிசேஷப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, இராஜ்யத்தில் சுவிசேஷம் இஸ்ரவேலர்களுக்கும், புறஜாதிகளுக்கும் எவ்வளவு முக்கியம் என்பதை அறிந்துகொள்ளமுடியும்.

மேலே சொன்ன ஆறு நிகழ்வுகளிலும் இயேசு பிசாசுகளை விரட்ட போராடவில்லை. பிசாசுகள் தான் இயேசுவை பரிசுத்தர், தாவீதின் குமாரன் என்று சொல்வதோடு மட்டுமல்லாமல், இயேசுவின் முதல் வருகையையும், இரண்டாம் வருகையையும் அறிக்கையிடுவதைப் பார்க்கலாம். இப்படியாக இந்த ஊழியத்தைப் பிரதான ஊழியமாக செய்யாமல், லூக்கா 11:20இல் சொல்லியபடி, தேவனுடைய இராஜ்ய கட்டுமான பணிக்காக இதை அனைவரும் பயன்படுத்தலாம். இதை மேடை போட்டு துரத்த ஆசைப்பட்டாலோ அல்லது உன் ஊழிய நிறுவன வளர்ச்சிக்காகவோ பயன்படுத்த விரும்பினால் ஒரு நாள் இந்த பிசாசு உன்னைப் பார்த்துச் சொல்லும்

**"நான் இயேசுவையும் அறிவேன்.<br>பவுலையும் அறிவேன்.<br>நீ யார்" என்று.**



# உணர்ச்சி நுண்ணறிவு

## EMOTIONAL INTELLIGENCE

Mr. Isaac Kamalesh

உணர்ச்சி நுண்ணறிவு (EMOTIONAL INTELLIGENCE - EI அல்லது EQ) என்பது ஒருவரின் சொந்த உணர்ச்சிகளை அடையாளம் காணவும், புரிந்துகொள்ளவும், நிர்வகிக்கவும் கூடிய திறன், அதே போல் மற்றவர்களின் உணர்ச்சிகளை அடையாளம் காணவும், புரிந்துகொள்ளவும், செல்வாக்கு மற்றும் ஆதிக்கம் செலுத்தவும் கூடிய திறன் ஆகும்.

**இதன் 5 முக்கிய கூறுகள்**

- **SELF-AWARENESS (சுய விழிப்புணர்வு):** உங்கள் சொந்த உணர்ச்சிகள், பலங்கள், பலவீனங்கள், மதிப்புகள் போன்றவை உங்கள் எண்ணங்கள் மற்றும் நடத்தையை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை அறிந்துகொள்வது (நீதி. 25:28).
- **SELF-REGULATION (சுய கட்டுப்பாடு):** சீர்குலைக்கும் உணர்ச்சிகள்மற்றும்தூண்டுதல்களைக்கட்டுப்படுத்தும் திறன் மற்றும் மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளும் திறன் (நீதி. 18:13).
- **MOTIVATION (உந்துதல்):** சாதனைக்காக பணம் அல்லது அந்தஸ்துக்கு அப்பாற்பட்ட வேலையின் மீது ஆர்வம் கொண்டிருத்தல் (எபி. 3:13).
- **EMPATHY (பச்சாதாபம்):** மற்றவர்களின் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு அக்கறையுடன் செயல்படுதல் (மாற்கு 12:31)
- **SOCIAL SKILLS (சமூகத் திறன்கள்):** மக்கள் விரும்பும் உறவுகளை நிர்வகித்தல், பயனுள்ள தொடர்பு மற்றும் வலுவான நெட்வொர்க்குகளை உருவாக்குதல் (பிலி. 2:3-4).

**இதன் 3 முக்கியமான விதிகள்:-**

### 1. வெள்ளி விதி:

உணர்ச்சி ரீதியாக புத்திசாலியாக மாறுவதற்கான முதல் படி, குறைந்தபட்சம் நீங்கள் எப்படி நடத்தப்படுவதை விரும்பவில்லை என்பதைப் புரிந்துகொள்வதும், மற்றவர்களை அதே வழியில் நடத்தாமல் இருப்பதுமாகும். அனைவரும் மரியாதை, அன்பு மற்றும் அக்கறையுடன் நடத்தப்படுவதை விரும்புகிறார்கள். நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளப்பட மகிழ்ச்சியையும் மற்றும் அமைதியையும் விரும்புகிறோம். நாமும் மற்றவர்களை அதேபோல் நடத்த வேண்டும்.

### 2. பொன் விதி:

வெள்ளி விதி உங்கள் மனதிலும், ஆன்மாவிலும் ஒரு பழக்கமான நடைமுறையாக மாறியவுடன், உணர்ச்சி நுண்ணறிவின் அடுத்த படி, இயேசு உருவாக்கிய 'நேர்மறையான பதிப்பு' நீங்கள் எப்படி நடத்தப்பட விரும்பவில்லை என்பதை இப்போது நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் எப்படி நடத்தப்பட விரும்புகிறீர்கள் என்பதைக் கவனியுங்கள். நீங்கள் புரிந்து கொள்ளப்பட விரும்பினால், புரிந்துகொள்ள முயலுங்கள். மற்றவர்கள் உங்களைப் பற்றி நன்றாக நினைக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், மற்றவர்களைப் பற்றி நன்றாக நினையுங்கள்.

அனைவரும் வெள்ளி மற்றும் தங்க விதியை உண்மையாகப் பின்பற்றினால், உலகம் மிகவும் அமைதியானதாகவும், மன அழுத்தம் குறைவான இடமாகவும் இருக்கும். அவமதிப்பு, மறைக்கப்பட்ட நோக்கங்கள், வெறுப்பு மற்றும் சுயநல ஆதாயத்திற்காக இந்த விதிகளை நாம் பின்பற்றக்கூடாது. நாம் நமது உணர்ச்சி நுண்ணறிவை வளர்க்க விரும்பினால், இந்த இரண்டு விதிகளுடன் தொடங்கலாம்.

- நீங்கள் எப்படி நடத்தப்பட விரும்பவில்லையோ, அப்படி மற்றவர்களை நடத்தாதீர்கள்.
- நீங்கள் எப்படி நடத்தப்பட விரும்புகிறீர்களோ, அப்படி மற்றவர்களை நடத்துங்கள்.

### 3. பிளாட்டினம் விதி

உங்கள் உணர்ச்சி நுண்ணறிவை வளர்ப்பதற்கான மூன்றாவது நிலை பிளாட்டினம் விதி. மற்றவர்கள் எப்படி நம்மை நடத்த வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அப்படியே அவர்களை நடத்துங்கள். இதனால் மக்கள் நமது எல்லைகளை மீறுவார்கள் என்று குழப்பிக் கொள்ளக்கூடாது. உங்கள் புரிதல், உணர்ச்சிகள் மற்றும் செயல்பாடுகள் இவைகளுக்கு மற்றவர்கள் தகுதியற்றவர்களாக இருந்தாலும், அவர்களைப் பற்றிய கருணை, அன்பு மற்றும் புரிதல் கொண்டவர்களாக மாற உங்களை தயார் செய்துக்கொள்ளுங்கள்.

நமக்கு "எதிர்மறை" உணர்ச்சிகள் அவசியம் தேவை, மோசமானவை அல்ல. ஆனால் எதிர்மறை உணர்ச்சிகள் நமது பழக்கமாக மாறினால், மன அழுத்தம், சந்தேகம் மற்றும் நம்பிக்கையின்மை உருவாகி, சூழ்நிலைகளை தெளிவாகப் பார்க்கும் திறனைத் தடுத்துவிடும். நம் எண்ணங்கள் நம் உணர்வுகளால் இயக்கப்படக்கூடாது; நம் எண்ணங்கள் நம் உணர்வுகளை வழிநடத்தி கட்டுப்படுத்த வேண்டும் (2 கொரிந்தியர் 10:5, ரோமர் 12:2, நீதிமொழிகள் 16:23).

மத்தேயு ஏழாவது அதிகாரத்தில் இயேசு பொன் விதியை மேற்கோள் காட்டியிருந்தாலும், சுவிசேஷங்கள் முழுவதும் அவர் மூன்று விதிகளையும் பின்பற்றினார். இங்கே ஒரு சில உதாரணங்கள்:

- வெள்ளி விதியுடன், அவர் ஆலயத்தை சுத்திகரித்தார்.
- பொன் விதியுடன், அவர் கருணை மற்றும் இரக்கம் காட்டுவதன் மூலம் மற்றவர்களை நேசித்தார்.
- பிளாட்டினம் விதியுடன், அவர் நோயுற்றவர்களைக் குணப்படுத்தினார், பேய்களை விரட்டினார், பாவிகளைச் சேர்த்தார், தலைவர்களைத் திருத்தி அழைத்தார்.

மற்றவர்களையும், நம்மையும் சிறப்பாக நேசிக்க வெள்ளி, தங்கம் மற்றும் பிளாட்டினம் விதிகளைப் பின்பற்றும்போது, இயேசுவைப் பற்றிய அறிவைப் பின்தொடர்ந்து, நம்மில் அவரது அடையாளங்களைப் பார்க்கலாம்.

# வாசற்படியில் கனம் பெற்ற ஸ்திரீ

Mrs. Kiruba Isaac

ஊழியனின் அலைச்சலை எண்ணி பசியோடு இருந்தவனுக்கு.
அன்னம் அளித்ததால் - நீ கனம் பெற்றாய்

ஊழியனின் அசதியைக் கவனித்து இளைப்பாற
அறை கட்டி கொடுத்ததால் - நீ கனம் பெற்றாய்.

ஊழியனின் அவசிய தேவையை உணர்ந்து
கட்டில் மேஜை நாற்காலி ஏற்பாடு செய்ததால் - நீ கனம் பெற்றாய்

ஊழியனின் அத்தியாவசிய தேவையைப் பூர்த்தி செய்ய.
குத்து விளக்கு வைத்ததால் - நீ கனம் பெற்றாய்.

ஊழியனின் அனைத்து தேவைகளையும் கணவனிடம்
ஆலோசித்து நிறைவேற்றியதால் - நீ கனம் பெற்றாய்.

ஊழியன் அழைத்து உன் தேவை என்ன என்று கேட்க
"என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய் குடியிருக்கிறேன்" என்றதால் - நீ கனம் பெற்றாய்

ஊழியனின் உதவிக்காரன் மூலம் உன் நிலை வெளிப்பட்ட பிறகும்
சாந்தமாய் ஏற்றுக்கொண்டதால் - நீ கனம் பெற்றாய்.

ஊழியனிடம் நீ கேட்காமல் அவன் கொடுத்த ஆசீர்வாதத்தை
தட்டாமல் ஏற்றுக்கொண்டதால் - நீ கனம் பெற்றாய்.

ஊழியன் 'பரிசுத்தவான்' என்று சாட்சி கொடுத்த நீ
உன் வீட்டில், ஊழியனின் அறை 'வாசற்படியில்' நின்ற உன்னிடம்
நாங்கள் கற்றது


**அ**மைதியில் உன் ஆளுமை
**ஆ**ளுமையில் உன் இயல்பு
**இ**யல்பில் உன் ஈகை
**ஈ**கையில் உன் உண்மை
**உ**ண்மையிலேயே...
**ஊ**ராரின் சாட்சி படி
**ஐ**யமின்றி சொல்லலாம் - நீ
'கனம் பெற்ற ஸ்திரீ'

உன் கணவன்:
கழனி அதிகம் கொண்டவன்.
கனம் பெற்ற அரசவையின் தீர்க்கதரிசி.

உன் பிள்ளை:
ஏழு முறை தும்மி உயிர்பெற்றவன்
ஏழு தலைமுறை அறிந்த ஒரே தீர்க்கதரிசி
இயேசுவின் உயிர்ப்புக்கு நிழல் சாட்சி
இயேசுவின் வாயில் உச்சரிக்கப்பட்டவன்.



[குறிப்பு: சரித்திரத்தையும், கணவன் மற்றும் பிள்ளையின் பெயரையும் அறிந்து கொள்ள கொடுக்கப்பட்டுள்ள வேதப்பகுதிகளை எடுத்து வாசிக்கவும் 2 இரா. 4:8-37, 14:24, 25 / யோனா 1:1 / மத். 12:39-41 / லூக். 11:29-32]



# யேசபேலின் ஆவி Vs ரூத்தின் ஆவி



Rev. Daniel Gnanapragasam

தெரிந்துக்கோ... புரிஞ்சுக்கோ...

"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத்தேயு 5:3)
ஆவிகளைப் பகுத்தறிய பரிசுத்த ஆவியானவர் தந்தருளப்பட்டுள்ளார். ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவனின் பண்புகள் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலுக்குட்பட்டது. இங்கே நாம் காணப்போகிற இரண்டு பெண்களிடம் காணப்பட்ட ஆவிகளும், அதன் சுபாவங்களும் எப்படி மதிப்பிடப்படுகிறது என்பதை அறிந்துக் கொள்ளலாம்.
பழைய ஏற்பாட்டில் யேசபேல் ராணி இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் மனைவி, வட திசையில் வாழ்ந்த இஸ்ரவேலர்களிடையே சிலை வணக்க வழிபாடுகளையும், பாகாலின் கோயிலையும் கட்டி ஜனங்களைத் திசை திருப்பிய ஒரு பெண். புதிய ஏற்பாட்டில் தியத்தீரா சபைக்குள் ஒரு பொய்யான தீர்க்கதரிசியாக செயல்படும் ஒரு பெண்ணைக் குறித்து வெளிப்படுத்தல் நூலின் ஆசிரியர் யேசபேலின் ஆவி என்று குறிப்பிடுகிறார் (வெளி 5:18-29). இந்த யேசபேலின் ஆவி வேசித்தனம், விக்கிரக ஆராதனை, கவர்ச்சி, மாயை, பாலியல் ஒழுக்கக்கேடு போன்ற சுபாவங்களோடு அடையாளம் காணப்படுகிறது. இந்த பெயர் சுமார் 22 முறைக்கும் மேலாக பயன்படுத்தப்பட்டுள்ளது.
ரூத் என்ற மோவாபிய பெண்மணியின் ஆவியைக் குறித்து அறியும்போது நன்மையும், விசுவாசமும் காட்டிய ஒரு உண்மைப் பெண். மேலும், ஆவியின் கனி நிறைவுக் கொண்ட தன் வாழ்வினால், சுவை மிகுந்த பயனுள்ள வாழ்வு வாழ்ந்தவள். தன் மாமியாரோடும், அவள் தெய்வம் "யாவே" மீதும் மிகுந்த வைராக்கியம் கொண்டவள். சரியானதைச் செய்ய தெரிந்தெடுத்து தேவ தயவு பெற்ற பெண். வாழ்க்கை எவ்வளவு இருண்டாலும், இழந்தாலும் மெய் வெளிச்சத்தைக் கண்டு, மெய் வாழ்வு பெற்றுக் கொண்ட ரூத்தின் வாழ்வு, நடைமுறை கிறிஸ்தவ ஜீவியத்திற்கு ஒரு அழைப்பாக உள்ளது.

| | யேசபேலின் ஆவி | ரூத்தின் ஆவி |
|---|---|---|
| 1. | சீதோனிய ராஜகுமாரத்தி யேசபேல் (1 இரா. 16:31). | மோவாபிய ராஜகுமாரத்தி ரூத். |
| 2. | இந்த ஆவி இருபாலர்களிடமும் செயல்படும் காம இச்சையின் ஆவி. | நேர்மை, நீதி, உத்தமம் போன்ற நற்கிரியை ஜீவியத்திற்கான ஆவி. |
| 3. | இது ஜனங்களை வசியப்படுத்தி கட்டுப்படுத்தும் ஆவி. | ஜனங்களிடம் தயவும், கடவுளிடம் இரக்கத்தையும் பெற்ற ஆவி. |
| 4. | பாலியல் ஒழுக்ககேட்டை தூண்டும் ஆவி. | பரிசுத்த வாழ்வுக்கு தன்னை ஒப்புக்கொடுத்த ஆவி (ரூத் 3:10). |
| 5. | தலைமைத்துவத்தை (கணவனை) பலவீனப்படுத்தி பயன்படுத்தும் ஒரு ஆவி. | தலையான புருஷனின் காலடியிலிருந்து சேவகம் செய்யும் ஆவி (ரூத் 3:7). |
| 6. | மனந்திரும்புதலை விரும்பாத ஒரு ஆவி. | மனமாற்றத்தை விரும்பும் ஆவி. |
| 7. | தேவனைக் குற்றஞ்சாட்டி நன்றியில்லாத நிலைப்பாட்டைக் குறிக்கும் ஆவி. | தேவனை மகிமைப்படுத்தி நன்றி உணர்வை வெளிப்படுத்தும் ஆவி. |
| 8. | இவள் தீமைக்குத் தாயானவள். | இவள் தாவீதுடைய தாத்தாவின் தாயானவள். |
| 9. | ஜனங்களுக்கு ஒருவகை பயத்தை ஏற்படுத்தும் ஆவி. | பயம் நீங்கி தெய்வீக வழி காட்டுதலைப் பெற்ற ஆவி. |
| 10. | சாத்தானின் தூதனாக தள்ளப்பட்டாள் (2இரா. 9:33). | இயேசுவின் வம்சப் பிறப்பு பட்டியலில் விசுவாசத்தால் இடம்பெற்றாள் (மத். 1:5). |

இப்படி இருவகையான ஆவிகளின் சுபாவங்கள் இன்றும் நமக்கு சவாலாக உள்ளது. 1 யோவான் 4:1(B)இல் "நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்". கடவுள் விரும்பும் கனத்திற்குரிய பாத்திரமாக நம் ஆவிக்குரிய ஜீவியம் காணப்படுமேயானால், அதுவே ஆண்டவருக்கு மிகவும் பிரியமானதாக காணப்படுகிறது.

**தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!**



# தலைவர்களைப் பெருக்குவதின் மூலம் ஊழியம்

Mr. Israel Nathaniel Edward



“ஊழியம்” (கிரேக்க மொழியில் DIAKONIA) என்ற சொல்லுக்கு பரிசுத்த ஆவியின் பெலத்தால் மற்றவர்களுக்குச் சேவை செய்வது என்று பொருள். முன்னர் குறிப்பிட்டதுபோல், இந்த ஆண்டு முழுவதும், நான்காவது வாரங்களில், ஆதித்திருச்சபையை (தோராயமாக கிபி 100 வரை இருந்த) நமக்கு மாதிரியாக வைத்து, அக்காலத்து கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஊழியம் செய்தனர் என்பதைக் கற்றுக்கொள்ளப் போகிறோம். இந்த வாரம் தலைவர்களைப் பெருக்கும் ஊழியத்தைப் பற்றி பார்க்க இருக்கிறோம்.

எந்த ஒரு யுகத்திலும், தகுதியான தலைவர்களை அடையாளம் கண்டு, அவர்களைப் பயிற்றுவிப்பது ஒரு பெரிய சவாலாகும். ஆனால் முதல் நூற்றாண்டு திருச்சபையில், ஏராளமான தலைவர்கள் இருந்தனர்; மேலும் தலைவர்களின் எண்ணிக்கையில் தொடர்ச்சியான வளர்ச்சியிருந்தது. இது எப்படி நடந்தது?

### *இயேசுவின் மாதிரி:*

முழு செயல்முறையும் இயேசுவிடமிருந்தே தொடங்கியது. அவரது மூன்று வருட ஊழியம் அடிப்படையில் 12 பேருக்கான (70 மற்றும் 120 போன்ற பின்பற்றுவர்களின் ஒரு பெரிய குழுவிற்கான) ஒரு தலைமைத்துவ பயிற்சித் திட்டமாக இருந்தது.

- தெரிந்துகொளல் மற்றும் அழைப்பு: “தன்னோடிருப்பதற்காக” குறிப்பிட்ட நபர்களை அவர் அழைத்தார் (மாற்கு 3:14).
- வாழ்க்கை மூலம் பயிற்சி: அவர் உவமைகள் மற்றும் பிரசங்கங்கள் மூலம் அவர்களுக்கு கற்பித்தார். ஆனால் அவருடைய வாழ்க்கை முறை, ஊழியம் மற்றும் விவாதங்கள் (எ.கா. லூக்கா 9:10இல் அனுப்பப்பட்ட பிறகு) மூலம் ஆழமான சத்தியங்களைக் கற்றுக் கொண்டனர்.
- அதிகாரம் மற்றும் ஊழியத்தை ஒப்படைத்தல்: அவர் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து, ஊழியத்தில் கற்றுக் கொண்டவற்றைப் பயிற்சிவிப்பதற்காக அனுப்பினார் (மத். 10:1, 5-8).
- எதிர்காலத்திற்கான வலிமையை அளித்தல்: பூமியின் எல்லைகள் வரை தன்னுடைய சாட்சிகளாக இருப்பதற்காக, பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வருவார் என்று அவர் வாக்களித்தார் (அப். 1:8).

*ஆதி அப்போஸ்தலருடைய திருச்சபையின் முக்கிய நடைமுறைகள்* (அப்போஸ்தலருடைய நடபடிகள் மற்றும் புதிய ஏற்பாட்டு கடிதங்கள்)

இயேசு பரலோகத்திற்குச் சென்ற பிறகு, அப்போஸ்தலர்களும், ஆரம்பகால சபைத் தலைவர்களும் இந்த “தலைவர்களைப் பெருக்கும் மாதிரி”யைத் தொடர்ந்தனர்.

**1. பரிசுத்த ஆவியால் பெலப்படுதல்:** இது முதலில் செய்யப்பட வேண்டிய கட்டாயமான படியாக இருந்தது. தலைவர்கள் அவர்களின் கல்வி தகுதிகளுக்காக தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு ஞானத்தையும், நற்குணத்தையும் வெளிப்படுத்தியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் (அப். 6:3).

**2. தகுதியான தலைவர்களை அடையாளம் காணுதல்:** விசுவாசம் ஆவிக்குரிய முதிர்ச்சி மற்றும் சேவை ஆகியவற்றை ஏற்கனவே காண்பிக்கும் நபர்களை தலைவர்கள் தேடினார்கள்

- **ஏழு பேர் (அப். 6):** இவர்கள் “ஆவியும், ஞானமும் நிறைந்தவர்கள்” என்று அறியப்பட்டவர்கள். ஒரு நடைமுறை சிக்கலைத் தீர்க்க, சீடர்களிடையேயிருந்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது அப்போஸ்தலர்கள் தம்முடைய ஜெபம் மற்றும் உபதேச ஊழியத்தில் கவனம் செலுத்த வழிவகுத்தது.
- **பர்னபா:** இவன் “நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும், விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாய்” இருந்தான்

(அப். 11:24). பின்னர் அவன் பவுலுக்கு உத்தரவாதம் அளித்ததோடு, யோவான், மாற்குவையும் வழிநடத்தி, தானே ஒரு முக்கியமான "தலைப்புகளை உருவாக்கும் தலைவராக" மாறினான்.

**3. பயிற்சி மாணவர் மற்றும் செய்து பயிலும் மாணவர் ("பவுலின் மாதிரி"):** பவுல், அப்போஸ்தலர் தலைவர்களை உருவாக்குவதில் தலைச்சிறந்தவன். அவன் வெறும் பிரசங்கம் மட்டும் செய்யவில்லை, ஒரு குழுவைக் கட்டி எழுப்பினான்.

- **திட்டமிட்ட கூட்டு முயற்சிகள்:** அவர் எப்போதும் ஒரு குழுவுடன் (பர்னபா, சீலா, தீமோத்தேயு, லூக்கா போன்றவர்கள்) வேலை செய்தார்.
- **பயிற்சிக்காக வேலையில் அமர்த்துதல்:** அவர் தீமோத்தேயு (அப். 16:1-3) மற்றும் தீத்து போன்ற இளம் தலைவர்களை மிஷனெரி பயணங்களில் அழைத்துச் சென்றார். ஊழியம், போதனை மற்றும் சபையை நிறுவுவதற்கான மாதிரியைக் காட்டினார்.
- **பணிகளை ஒப்படைத்தல்:** குறிப்பிட்ட பணிகளுக்கு அவர்களை அனுப்பினார். "மீதியான காரியங்களைச் சீர்ப்படுத்தவும், ஒவ்வொரு பட்டணத்திலும் மூப்பர்களை நியமிக்கவும்" கிரேத்தா தீவில் தீத்துவை விட்டுச் சென்றார் (தீத்து 1:5). தன்னுடையப் போதனைகளை நினைவூட்டுவதற்காக தீமோத்தேயுவை கொரிந்து சபைக்கு அனுப்பினார் (1 கொரி. 4:17).
- **அதிகாரம் அளிக்கும் கடிதங்கள்:** தீமோத்தேயு மற்றும் தீத்துவுக்கு எழுதிய அவரது கடிதங்கள் அடிப்படையில் தலைமைத்துவக் கையேடுகளாகும். அவை எப்படி நாம் வாழ்வது, மற்றவர்களை வழி நடத்துவது, கற்பிப்பது மற்றும் மற்ற விசுவாசத் தலைவர்களை நியமிப்பது என்பவற்றைக் கற்றுக் கொடுக்கின்றன.

**4. உள்ளூர் தலைமை கட்டமைப்புகளை நிறுவுதல்:** சபைகள் ஒரு ஒற்றை அப்போஸ்தல தலைவரை மாத்திரம் சார்ந்திருப்பதைப் பவுல் விரும்பாமல், அவை சுய-நிலைத்தன்மை கொண்ட உள்ளூர் தலைமைத்துவத்தால் வழிநடத்தப்படுவதையே விரும்பினார்.

- **மூப்பர்கள் / கண்காணிகளை நியமித்தல்:** பவுல் மற்றும் பர்னபா போன்ற அப்போஸ்தல ஊழியர்களின் முதன்மைப் பணி, ஒவ்வொரு புதிய சபையிலும் பல மூப்பர்களை நியமிப்பதாகும் (அப். 14:23). இவர்கள் திருச்சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, உள்ளூர் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.
- **மேலானத் தகுதிகள்:** உலகப்பிரகாரமான வெற்றியை விட, கிறிஸ்துவைப் போன்ற குணம், அடிப்படைக் கோட்பாடுகளை நன்கு அறிந்திருத்தல் மற்றும் போதிக்கும் திறன் போன்றத் தகுதிகள் முக்கியத்துவப்படுத்தப்பட்டன (1 தீமோ. 3:1-7 மற்றும் தீத்து 1:6-9இல் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது).

**5. போதனை மற்றும் மாதிரியாக இருப்பதன் மூலம் பெருக்கம்:** கற்றுக்கொண்ட போதனைகளை மற்றவர்களுக்கு ஒப்படைப்பதன் மூலம் தங்களைப் போட்ட தலைவர்களைப் பெருக்க வேண்டும் என்பதே நம்பிக்கைக்கு பாத்திரமான தலைவர்களுக்கான கட்டளையாயிருந்தது.

- **2 தீமோ. 2:2:** இது தலைவர்களைப் பெருக்குவதைக் குறித்த ஒரு முக்கியமான வசனமாகும். "நீ பல சாட்சிகளுக்கு முன்பாக என்னிடத்தில் கேட்டவைகளை, மற்றவர்களுக்குக் கற்பிக்கத்தக்கவர்களாயிருக்கிற நம்பிக்கைக்குரிய மனுஷரிடத்தில் ஒப்புவி". இது தலைமைத்துவ பெருக்கத்தின் நான்கு தலைமுறைகளைக் கோடிட்டுக் காட்டுகிறது:

பவுல் --> தீமோத்தேயு --> நம்பிக்கைக்குரிய மனிதர்கள் --> மற்றவர்கள்.

**முதல் நூற்றாண்டு தலைவர்களைப் பெருக்கும் சுழற்சி:** இந்த செயல்முறையை மீண்டும் மீண்டும் வரும் சுழற்சியின் சுருக்கமாகக் கூறலாம்:

1. **மாதிரியாகுதல்:** ஒரு முதிர்ந்த தலைவர் (இயேசு, பவுல் போன்றவர்கள்) ஊழியத்தை உண்மையாக தன் வாழ்க்கையில் நிறைவேற்றிக் காண்பிக்கிறார்.
2. **உதவுதல்:** வளரும் தலைவர் பணியில் சேர்ந்து, முதிர்ந்த தலைவருக்கு உதவுகிறார் (எ.கா.: தீமோத்தேயு பவுலின் குழுவில் சேர்தல்).
3. **கவனித்தல்:** முதிர்ந்த தலைவர் ஒரு பணியை ஒப்படைத்து, வளரும் தலைவர் அதை எப்படி செய்கிறார் எனப் பார்க்கிறார் (எ.கா.: பவுல் தீமோத்தேயுவை கொரிந்துக்கு அனுப்புதல்).
4. **ஒப்படைத்தல்:** முதிர்ந்த தலைவர் ஒரு புதிய பணிக்கு முழுப்பொறுப்பு மற்றும் அதிகாரத்துடன் வளரும் தலைவரை நியமிக்கிறார் (எ.கா.: கிரேத்தாவில் தீத்துவை விட்டுச் செல்லுதல்).
5. **மீண்டும் செய்தல்:** புதியத் தலைவர் இப்போது முதிர்ந்த தலைவராக மாறி, மற்றவர்களைக் கொண்டு இந்த சுழற்சியை மீண்டும் தொடக்கத்திலிருந்து செய்கிறார்.

விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில சீடர்களாயிருந்த ஆரம்பகாலத் திருச்சபை ஒரு சகாப்தத்திற்குள் ரோமானிய சாம்ராஜ்யம் முழுவதிலும் ஒரு பேரியக்கமாய் வளர்ந்தது ஒரு நம்ப முடியாத வளர்ச்சியாகும். ஆனால் அது உயிருள்ள, மீண்டும் மீண்டும் உருவாக்கக்கூடிய தலைவர்களைப் பெருக்கும் மாதிரியின் செயல்திறனுக்கு நேரடி சான்றாக உள்ளது.

**நம்முடைய ஊழியத்திலும் இந்த மாதிரியைப் பின்பற்ற கர்த்தர் தாமே நமக்கு உதவுவாராக.**

Rev. Prabakara Sarathy



# சோதனை வாசல் [மிப்காட் வாசல்]

### அறிமுகம்:

நெகேமியா 3:31இல், 'சோதனை வாசல்' என்பது மிப்காட் வாசலின் மற்றொரு பெயர். இது நகரத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்தது. "மிப்காட்" என்று பெயர். "மிப்காட்" என்ற வார்த்தைக்கு எண்ணுதல், அல்லது சோதனை செய்வதற்கான ஒரு இடம் என்று பொருள் உள்ளது. இது வரிவசூல், அதிகாரப்பூர்வ கூட்டங்கள், ஆய்வுகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆகியவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டது.

### மிப்காட் வாசல் – வாசலைப் பற்றிய வேறுபட்ட புரிதல்:

இந்த வாசலின் துல்லியமான இடம் தெளிவாகக் கூறப்படவில்லை என்றாலும், இது குதிரை வாசலுக்கும், மூலைப் பகுதியில் உள்ள மேல் அறைக்கும் இடையில் இருந்தது. அந்த பகுதியில் நகைச்செய்யும் தொழிலாளி மல்கியா சுவர் புனரமைப்பில் ஈடுபட்டிருந்தார். இது மக்கள் கணக்கெடுப்பு அல்லது ஆய்வுக்காக, இராணுவம் அல்லது நகர் நிர்வாகம் சார்ந்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட வாசலாக இருந்திருக்கலாம்.

"மிப்காட்" என்பது 'கூட்டம்' என்ற அர்த்தத்தையும் தருகிறது. இது மக்களை ஒருங்கிணைத்து தேவனின் ஆராதனைக்கும், சேவைக்கும் அழைத்துச் செல்லும் வாசலாக இருந்திருக்கலாம்.

### மிப்காட் வாசல் – தெய்வீகப் புரிதல்:

மிப்காட் வாசல் மக்களை தேவாலயத்திற்குள் அழைத்துச் செல்லும் இடமாக இருந்தது. அங்கு இஸ்ரவேல் மக்களின் பாவங்களுக்கு ஒரு குற்றமற்ற ஆட்டுக்குட்டி பலியாக அர்ப்பணிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் அவருடைய தொண்டின் முடிவில் தேவனின் அன்பு சிலுவையில் வெளிப்பட்டது. அவர் உலகத்தின் பாவங்களுக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக மரித்தார்.

### மிப்காட் வாசல் – தனித்துவமான புரிதல்:

மிப்காட் வாசல் என்பது மக்கள் ஒன்றுகூடுவதற்கான இடம். இயேசு கிறிஸ்துவின் தலைமையில் ஒன்று கூடும் விசுவாசிகள், தேவனுடைய ஆவியானவர் தங்களுக்குள் வாழ்கிறார் என்பதற்கான சாட்சியாக உள்ளனர். ஒருமைப்பாடு, ஒன்றான மனம், ஒரே எண்ணம் ஆகியவை வெளிப்படுகிறது. வெளி. 7:9இல் "இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்". பரிசுத்தம் செய்யப்பட்ட விசுவாசிகள் எல்லோரும் ஒரே குடும்பத்தின் உறுப்பினர்கள். நம்முடைய கர்த்தர் திரும்ப வரும்பொழுது, தம் ஜனங்களை ஒன்று திரட்டி, அவர்களுடைய செயல்களை ஆராய்ந்தறிந்து அவர்களை உயர்த்த வல்லவராயிருக்கிறார்.

### மிப்காட் வாசல் – உறுதியான புரிதல்:

தேவனுடைய ராஜ்யத்தில் "மக்கள் ஒன்று கூடுதல்" என்பது தவிர்க்க முடியாதது. மத்தேயு 28:18–20இல் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எல்லா மக்களுக்கும் அறிவிக்க வேண்டும். அப்பொழுது மக்கள் அவரை ஆண்டவராகவும், சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், தேவனோடு அதிகமாக நெருங்கிவரவும் வழிவகுக்கும்.

### நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் குறிக்கோள் – "போ அல்லது அனுப்பு":

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணியில் 'மிப்காட் வாசலின் ஆண்கள், பெண்கள்' ஆக இருங்கள். இந்த இயக்கம் (FMPB) இந்திய மக்களுக்கு இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிப்பதில் ஈடுபட்டுள்ளது. கர்த்தரின் அன்பை அறியாத மக்களுக்கு, ஊக்கத்துடனும், கலாச்சார வேறுபாடில்லாமலும் கர்த்தருடைய அன்பை அறிவித்து வருகிறது. ஜெபக்குழுக்கள் மற்றும் திருச்சபைகளிலிருந்து வாலிபர்களும் தங்களை அர்ப்பணித்து இப்பணியை செய்துவருகின்றனர்.

நீங்களும் இயேசுவின் அன்பை அறிவிக்க விரும்புகிறீர்களா? மிப்காட் வாசலைப் போலவே, நீங்களும் தேவனுடைய திருச்சபைக்குள் மக்களை அழைக்கும் சேவகராக இருக்க விரும்புகிறீர்களா? புறப்பட்டு வாருங்கள்! கர்த்தரை அறியாத மக்களுக்கு அவரை அறிவித்து, கர்த்தரின் இரண்டாவது வருகைக்கு அவர்களைத் தயார்படுத்துவோம்.

அன்பு வாலிப பிள்ளைகளே! கர்த்தர் உங்களுக்கு கொடுத்திருக்கும் தாலந்துகளை (திறமைகளை) புதைத்துவிடாமல், தேவனை மகிமைபடுத்தி, தேவனுடைய ராஜ்யம் விரிவடையும் பணியைச் செய்ய நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு உங்களை அழைக்கிறது. கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்படிந்து அவரை அறியாத ஜனங்களை தேவனுடைய மந்தையில் சேர்க்க முன்வாருங்கள்! தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

2026ஆம் ஆண்டிற்கான கேரீத் எழுத்தாளர் திட்டக்கூடுகை நவம்பர் 22 & 23 ஆகிய தேதிகளில் ஒட்டன்சத்திரத்தில் (பாச்சலூர்) நடபெறவுள்ளது. இந்த கேரீத் இதழில் உங்கள் தாலந்துகளைப் பயன்படுத்த விரும்பினால் (தன்னார்வலராக) இக்கூடுகையில் கலந்துக்கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.
மேலும் விவரங்களுக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புக்கு: 94450 40148 / 93606 98617

## நவீன கால இரத்த சாட்சி

# சார்லி கிர்க்

சார்லி கிர்க் கொலை செய்யப்பட்டது, பைபிளில் அப்போஸ்தலர் நடபடிகள் 7இல் பதியப்பட்டுள்ள முதல் கிறிஸ்தவ இரத்த சாட்சியான ஸ்தேவான் கல்லால் அடித்து கொல்லப்பட்டதற்குச் சமமானது. ஸ்தேவான், தன் காலத்தின் மத அமைப்பை வெளிப்படையாக சவால் செய்து, இயேசுவே யூதர்களின் மேசியா என்பதை உறுதியாக நிரூபித்தார். அவருடைய வாதங்களை மதத் தலைவர்களால் எதிர்க்க முடியவில்லை. எனவே, அவர்கள் அவரைக் கொன்றனர். அதைப் போலவே, சார்லி கிர்க் பைபிளின் உண்மைகளைப் பாதுகாப்பவராகவும், தற்கால இடதுசாரிகளின் “விழிப்புணர்வு” மற்றும் பைத்தியக்காரத்தனமான சிந்தனைகளுக்கு எதிராக வெற்றிகரமாக வாதிடுபவராகவும் இருந்தார். அவர்களால் இவரை வாதங்களில் வெல்ல முடியாததால், இவரைக் கொன்றனர்.

மேலும், சுட்டது ஒரு தனிப்பட்ட துப்பாக்கிதாரி அல்ல. நவீன கால ஊடகங்கள், தங்களது புதிய மதத்துடன் உடன்படாத எவரையும் ஹிட்லர் என்றும் பாசிஸ்ட் என்றும் சித்தரிக்கின்றனர். ஸ்தேவான் கல்லால் அடித்து கொல்லப்பட்டபோது, அதைப் பார்த்துக்கொண்டிருந்த சவுலைப் போலவே இவர்களும் குற்றவாளிகள். அவர்கள் துப்பாக்கியின் விசையை இழுக்காமல் இருக்கலாம், ஆனால் வெறுப்பினால் அந்த துப்பாக்கிதாரியைத் தூண்டி, ஆயுதத்தைத் தாங்க வைத்தனர்.

வேதாகமம், தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் கூறுகிறது (ஏசாயா 5:20). இதுவே இயேசு யோவான் 3:19இல் சொன்னது, “ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாய் இருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது”.

சார்லியின் படுகொலையை, அரசியல் படுகொலை என்று பலர் கருதலாம், ஆனால் இது நன்மையை எதிர்த்துப் போராடும் தீமையாகும். இயேசு சொன்னது போல, பொல்லாங்கு செய்கிற எவரும் ஒளியை வெறுக்கின்றனர், ஏனென்றால் அது அவர்களுடைய கிரியைகளை வெளிப்படுத்துகிறது. இந்த தேசத்தை நாம் இழந்துவிட்டோம் என்பதற்கு இது ஒரு அறிகுறி என்று பலர் நினைக்கலாம். ஆனால் உண்மையில் அதற்கு நேர் எதிரானது. இந்தச் சம்பவம், இறைபக்தியற்ற இடதுசாரிகள் தோற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அனைத்து எதிர்ப்புகளையும் அடக்குவதுதான் அவர்கள் உயிர்வாழ ஒரே வழி என்பதையும் காட்டுகிறது.

சார்லி கிர்க், ஒரே தலைமுறையில் லட்சக்கணக்கான மக்களை, குறிப்பாக இளைஞர்களை, நம்பிக்கையின் செய்தி மூலம் அடைந்து, ஒரு இயக்கத்தைத் தொடங்கினார். அந்த இயக்கம் அவரைவிட மிக நீண்ட காலம் நிலைத்திருக்கும். அப்போஸ்தலர் நடபடிகள் 4இல், முதல் நூற்றாண்டு சபை தங்களுக்கு எதிராக வந்த துன்புறுத்தலுக்கு, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க இன்னும் அதிக தைரியம் தரும்படி ஆண்டவரிடம் ஜெபித்தது போலவே, சார்லியால் பெரிதும் ஈர்க்கப்பட்ட இளைய தலைமுறையும், அந்தத் தீப்பந்தத்தை எடுத்துக்கொண்டு, சார்லியின் முயற்சிகளை மில்லியன்களாகப் பெருக்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

சார்லி தொடங்கிய அமைப்பின் பெயர் (டர்னிங் பாயிண்ட்) போலவே, இது நம் தேசத்தில் ஒரு திருப்புமுனையாக இருக்கும். ஓரங்கட்டப்பட்டவர்கள் களத்தில் இறங்கி, இந்த போராட்டத்தில் ஈடுபடுவார்கள். மேலும், அப்போஸ்தலன் பவுலாக மாறிய சவுல், தமஸ்கு செல்லும் வழியில் இயேசுவை சந்திக்கும் வரை, தன் இருதயத்தில் தைரியத்தை உணர்ந்தது போலவே, பொது அறிவுக்கு எதிரான பைத்தியக்காரத்தனமான போதனைகளை ஊக்குவித்த பலர், இன்று இந்த நாடு தொடர்ந்து செல்ல இது வழியல்ல என்பதை உணர்கின்றனர். மனிதர்களின் இருதயங்களை மாற்றக்கூடிய ஒரே ஒருவர் இயேசு மட்டுமே. இயேசு மட்டுமே செய்யக்கூடிய நல்லதை, இந்த தீமையிலிருந்து அவர் கொண்டு வருவார்.

சார்லியைப் பொறுத்தவரை, அவர் எப்போதும் இருந்ததைவிட இன்று அதிகமாக உயிரோடிருக்கிறார். இயேசு பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். ஆனால் ஸ்தேவான் கல்லால் அடித்து கொல்லப்பட்டபோது, இயேசு பிதாவின் வலது பாரிசத்தில் நிற்பதைக் கண்டார். இயேசு, முதல் கிறிஸ்தவ தியாகியை கௌரவித்தார் என்று நான் நம்புகிறேன். அதேபோல், இயேசுவும், பரலோகம் முழுவதும், கிறிஸ்தவ விசுவாசத்தின் நவீன கால வீரரும், தியாகியுமான சார்லி தனது பரலோக வெகுமதியைப் பெற்றுக்கொள்ளும்போது, எழுந்து நின்று கௌரவிப்பார்கள் என்று நான் கற்பனைச் செய்கிறேன்.

சார்லி தனது 31 வருட குறுகிய காலத்தில் சாதித்தவை ஒரு அற்புதம். இது வெறும் ஒரு மனிதன் மட்டுமல்ல, ஒரு தேசத்தை வலுவாகப் பாதித்த ஒரு மனிதன் வழியாக கடவுள் செயல்பட்டார் என்பதற்கு இது சாட்சியாகும். இதனால் குடியரசுத் தலைவர், அரசியல் தலைவர்கள், செய்தி நிறுவனங்கள் மற்றும் பேஸ்பால் விளையாட்டு அரங்கம்கூட, ஒரு சில இறைபக்தியற்றவர்களால் குறிவைக்கப்பட்ட இந்த இளைஞனை கௌரவிக்க முன்வந்தனர்.

சார்லி எடுத்துரைத்த உண்மை, அவர் தொட்ட அனைவரின் இருதயங்களிலும் வாழும் என்பதை அறிந்து நாம் தைரியம் கொள்வோம். சார்லி கிர்க் அவர்களின் வெகுமதி பெரியது ! தங்கள் வாழ்நாள் முழுவதும் கணவரையும், தந்தையையும் இழந்த துயரத்தைச் சுமக்கும் அவரது மனைவி எரிகா மற்றும் இரண்டு இளம் குழந்தைகளுக்காக நாம் ஜெபிப்போம்.

